
# தமிழரசு

16.7.1995 ரூ.3







திரு. யூ. ஸ்ரீனிவாஸ் - மாண்டலின்

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர் !

கலை நிகழ்ச்சிகளில் சில....

சரசாலயா குழுவினர் “சாகுந்தலம்” நாட்டிய நாடகம்.



# இந்த இதழில்...


தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் சங்க மாநில மாநாட்டில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ........ 2

டாக்டர் ஜெ. ஜெயலலிதா கல்வி உதவித் தொகைத் திட்டம் ........ 7

காயிதே மில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழா ; மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை ........ 9

மாணவ, மாணவிகளுக்குப் பரிசளிப்பு : மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரை ........ 17

உலகின் முதன் மொழிக்கு உயர்வளித்த முதல்வர்! —மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் ........ 21

தமிழகத் திட்டங்களுக்கு ராஜஸ்தான் மாநில முதல்வர் பாராட்டு ........ 24

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ராணி அம்மையார் பாராட்டு ........ 25

நன்னிலத்தில் பாவேந்தர் பிறந்தநாள் விழா ........ 27

நூல்நயம் ........ 31

பாரதி! நீ ஒரு ஞானத் தீ — கவிஞர் மு. மேத்தா ........ 33

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் காயிதே மில்லத் நூற்றாண்டு விழா ........ 38

திருநெல்வேலியில் அரசுப் பொருட்காட்சி ........ 41

காரைக்குடியில் கவியரசு கண்ணதாசன் பிறந்தநாள் விழா ........ 43

தமிழில் மருத்துவம் — டாக்டர் பி.பி. ராஜன் ........ 46



## தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

ஆனித் திங்கள் : 32

மலர்: 26 இதழ்: 2

16.7.1995

விலை ரூபாய்: 3




### இதழ்தோறும் ஓர் இனிய குறள்

இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு

பிறப்பு வீடு என்பன போல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அறத்தை மேற்கொண்டவரின்பெருமையே உலகத்தில் உயர்ந்தது.

"தமிழக மக்களின் பேராதரவுடனும், பேரன்புடனும், தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்று, மக்கள் சக்தி என்ற, மாபெரும் சக்தியின் துணையுடன், நான்கு ஆண்டுக் கால மக்கள் பணியை முடித்து ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும், மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் சங்கத்தின் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் பெரு மகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.




சோதனைகளும், சாதனைகளும் நிறைந்த, ஒரு நான்காண்டு காலகட்டத்தை வெற்றி கரமாகக் கடந்துவிட்டு, உங்கள அன்பு

# "பெண்களையும் கிராம உதவியாளர்களாக்கிப் பெருமை கொண்டது இந்த அரசு!; பகுதிநேரப் பணியாளர்களை முழுநேர அரசுப் பணியாளர்களாக்கி ஆணை பிறப்பிக்கப்படுகிறது!"

## தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் சங்க மாநில மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் விழாப் பேருரை

அன்னை இந்தச் சீரிய விழாவில் பங்கேற்க வந்துள்ளேன். பொய்யையும், புரட்டையும், சிலர் செயற்கையாக உருவாக்கிய இடர்ப் பாடுகளையும், மக்கள் சக்தியின் மகத்தான துணையுடன் நான் துணிவுடன் எதிர் கொண்டேன். தமிழகத்தை முன்பு ஆட்சி செய்தவர்கள் சாதித்திராத பல்வேறு சாதனைகளையும், இன்று நிகழ்த்திக் காட்டி இருக்கிறோம். எனவேதான், சோதனைகளும் சாதனைகளும் நிறைந்த நான்காண்டுக் காலகட்டம், என்று குறிப்பிட்டேன். சிந்தனை யில் தெளிவும் செய்கையில் நேர்மையும் மக்கள் முன்னேற்றத்தில் உண்மையான ஈடுபாடும் மக்கள் சக்தி என்ற மாபெரும் சக்தியின் துணையும், முழுமையாக இருந் தால், நாம் எதிர்கொள்ளும் இன்னல் களையும், இடர்ப்பாடுகளையும் முழுமை யாகச் சமாளித்து வெற்றி அடைய முடியும் என்பதையும், சந்தேகமற நிரூபித்துக் காட்டியுள்ளோம்.

பல துறைகளில் பின்னடைவு பெற்றிருந்த தமிழகம், கடந்[illegible] ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னே[illegible] நிமிர்ந்து நி[illegible]




## முதல் அட்டை சொல்லும் செய்தி

துறை, சமூக நலத் திட்டங்கள் என்று, எல்லாத் துறைகளிலும் இன்று தமிழகம், தன்னிகரற்று விளங்குகிறது என்றால், அது மிகையாகாது.

நல்லதொரு நிர்வாகத்தை அமைத்தால் தான், அரசின் பல்வேறு நலத் திட்டங்களின் பயன்கள், அடிமட்டத்தில் வாழ்கின்ற, ஏழை எளிய மக்களுக்குச் சென்றடையும். எனவே தான், நிர்வாகத்தின் ஆணிவேர்களாக, அடிமட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களும், பணியாளர்களும், மகிழ்ச்சியுடனும், மனநிறைவுடனும் பணியாற்றுகின்ற ஒரு சாதகமான சூழ்நிலையை, எங்கள் அரசு– உங்கள் அன்பு அன்னையின் அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்திலிருந்தே, கிராமம் என்பது, நிர்வாகத்தின் ஒரு அடிப்படை அலகாக- அதாவது, Basic unit of the Administration ஆக, விளங்கி வருகின்றது. இன்றும் அதே நிலை நீடித்து வருகின்றது. கிராம நிர்வாகத்தில் மிக முக்கியமான, அத்தியாவசியமான, அடிப்படைப் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கும், கிராம உதவியாளர்களை; உங்கள் • அன்புச் சகோதரியின் அரசு, ஒரு மனிதாபிமான உணர்வுடன் நடத்தி வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட நான் கடமைப் பட்டுள்ளேன்.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்., அவர்களின் காலத்தில் தான், அதாவது 1980 ஆம் ஆண்டில் தான் தமிழ்நாடு கிராம உதவியாளர்களுக்கான பணி விதிகள் வகுக்கப்பட்டன. அதன் பின்னர், பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வந்த, இந்த ஊழியர்கள் அனைவரும் 1.6.1992 முதல் “கிராம உதவியாளர்கள்” என்று, பொதுவாக அழைக்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டது உங்கள் அன்பு அன்னையின் ஆட்சிக் காலத்தில் தான் என்பதைச் சுட்டிக் காட்டுவதில் நான் பெருமிதமும், பெரும்கிழ்ச்சியும் அடைகின்றேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, 592 ரூபாய் மட்டுமே, மாதாந்திர மதிப்பூதியமாகப் பெற்று வந்த, கிராம உதவியாளர்களின் மதிப்பூதியத்தை, 1.1.1992 முதல், 612 ரூபாயாக உயர்த்தினோம். பின்னர் பல்வேறு கால கட்டங்களில், இந்த மதிப்பூதியத் தொகையை, உயர்த்திக் கொண்டே வந்து, இன்று குறைந்தபட்சம் 1,111 ரூபாய் மதிப்பூதியம் பெறுகின்ற, ஒரு உன்னதமான சூழ்நிலையை உங்கள் அன்பு அன்னையின் அரசு, ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பூதியம் மட்டுமின்றி, 1993 ஆம் ஆண்டு முதல் கிராம உதவியாளர்கள்

அனைவருக்கும் அகவிலைப்படியும், கூடுதல் அகவிலைப்படியும் வழங்கப்பட்டு வருகின்றது. 1994-ஆம் ஆண்டு முதல், கிராம உதவியாளர்களின் துயர் துடைக்க, இடைக் கால நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. இவ்வாறு, நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர், இந்தப் பணியாளர்களின் நிலையை உயர்த்த, பல நடவடிக்கைகளை மேற்கொண்டோம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

575 ரூபாய் மட்டுமே, பெற்று வந்த கிராம உதவியாளர்கள், இன்று குறைந்தபட்சம், 1,111 ரூபாய், மதிப்பூதியமாகப் பெற்று வருகிறார்கள் என்பதிலிருந்து கிராம உதவியாளர்களின் நல்வாழ்க்கையிலும், பொருளாதார முன்னேற்றத்திலும் நாங்கள் கொண்டிருக்கும் உண்மையான ஈடுபாடு விளங்கும் என்று பரிபூரணமாக நம்புகிறேன்.

கிராம உதவியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பண்டிகை முன்பணத்தையும் 200 ரூபாயிலிருந்து, 300 ரூபாயாக உயர்த்தி வழங்கியதும், உங்கள் அன்பு அன்னையின் அரசு தான். ஆண்கள் மட்டும் தான், கிராம உதவியாளர்களாகப் பணியாற்ற முடியும், என்ற ஒரு நிலையை மாற்றி–பெண்களையும், கிராம உதவியாளர்களாக நியமனம் செய்யலாம் என்று நான் ஆணைபிறப்பித்தேன். இன்று பல பெண்மணிகள், கிராம உதவியாளர்களாக நியமனம் பெற்று நன்முறையில் செயலாற்றி வருகிறார்கள். அவர்களில் பலரை, இந்த விழாவில் காணும்போது எனது மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

கிராம உதவியாளர்கள், பணியில் இருக்கும்போது, மரணம் அடைய நேரிட்டால் 40,000 ரூபாய் மட்டுமே, குடும்ப நல நிதியாக, வழங்கப்பட்டு வந்தது. உங்கள் அன்பு அன்னை அந்தத் தொகையை, 60,000 ரூபாயாக உயர்த்தி, ஆணை வழங்கியுள்ளேன் என்பதையும், இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பகுதி நேர ஊழியர்களாகப் பல நூற்றாண்டுகள் செயல்பட்டு வந்த, கிராம உதவியாளர்கள் தங்களைத் தமிழக அரசின் முழு நேர அரசு ஊழியர்களாக, அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை 1980-ஆம் ஆண்டு முதல், வலியுறுத்தி வருகின்றார்கள் என்பதை அறிந்தவுடன், இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண உடனடியாக, உயர்மட்ட அலுவலர் குழு ஒன்றை, நியமனம் செய்தேன்.

1993-ஆம் ஆண்டு நான் நியமனம் செய்த உயர்மட்ட அலுவலர் குழு, கிராம உதவியாளர்களைப் பகுதி நேர ஊழியர்கள், என்ற நிலையில் இருந்து மாற்றி, முழு நேர அரசு ஊழியர்களாக உயர்த்துவது குறித்து சில ஆலோசனைகளை வழங்கியுள்ளது. கிராம உதவியாளர்களுக்கு 500 ரூபாய் அடிப்படை ஊதியமாகக் கொண்டு, ஒரு ஊதிய விகித்தை நிர்ணயம் செய்யலாமா என்று, ஒரு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள், வாழ்க்கையில் வளம் பெற, பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற, உங்கள் அன்பு அன்னை, பகுதி நேர அரசுப் பணியாளர்களாகப் பணியாற்றி வந்த உங்கள் அனைவரையும் இன்று முதல் முழு நேர அரசுப் பணியாளர்களாக மாற்றி ஆணைபிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 31,000க்கும் மேற்பட்ட கிராம உதவியாளர்கள், இன்று முதல் நிரந்தரப் பணியாளர்களாக முழு நேர அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

உயர்மட்டக் குழு 500 ரூபாய் அடிப்படை ஊதியம் வழங்கலாம் என்று கூறி இருந்த பரிந்துரையை, நான் ஏற்றுக்கொள்வதோடு, 500 ரூபாய் என்கின்ற நிலையை மாற்றி,

★ நீங்கள் ஒவ்வொருவரும் சமத்துவம் காண, மாறுதல் கொள்ளப் பாடுபடுங்கள்! உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதம் ஒழிய உழையுங்கள்!

– தந்தை பெரியார்

> ★ ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாய பற்று மொழிப்பற்றேயாகும்.
>
> - தந்தை பெரியார்

இன்னும் 100 ரூபாய் கூடுதலாகச் சேர்த்து 600 ரூபாய் அடிப்படை ஊதியமாக நிர்ணயம் செய்யவும் ஆணைபிறப்பித்துள்ளேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 600 ரூபாய் அடிப்படை ஊதியமாகக் கொண்ட ஊதிய விகிதத்தில், கிராம உதவியாளர்களுக்கு, ஊதியம் நிர்ணயிக்கப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி, இந்தப் புதிய ஊதிய விகிதம் 1.6.1995 முதல் நடைமுறைப் படுத்தப்படும் என்பதையும், இந்த விழா மேடையில் அறிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

எனவே, தற்போது பணியில் இருக்கும் கிராமப் பணியாளர்கள் ஒவ்வொருவரும், இந்த மாதத்திற்கான ஊதியம் பெறும்போது, 300 ரூபாய் கூடுதலாகப் பெறுவார்கள் என்பதை அறியும்போது, இந்த அறிவிப்பு எத்தகையதொரு பொருளாதார முன்னேற்றத்தை அவர்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தும் என்பதை நினைத்து, எனது மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

பகுதி நேர ஊழியர்களாக, இத்தனை ஆண்டுக் காலமாகப் பணியாற்றி வந்த கிராம உதவியாளர்கள், முழு நேர அரசு ஊழியர்கள் ஆவதால் 31,000 பேருக்கு மேற்பட்ட, கிராம உதவியாளர்கள், இனி ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள் என்பது, மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும்.

அதுமட்டுமின்றி, பணியிலிருக்கும்போது இறக்கின்ற, அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு, கருணையின் அடிப்படையில், வழங்கப்படுகின்ற வேலைவாய்ப்பும், கிராம உதவியாளர்களுக்கும் கிடைக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நலன் காக்கும் தமிழக அரசு- உங்கள் அன்பு அன்னையின் அரசு பல ஆண்டுளாக, எவராலும் கவனிக்கப்படாமல் இருந்த கிராம உதவியாளர்களின் கோரிக்கையை- நிதிச் சுமை ஏற்பட்டாலும் துணிவோடு அதை ஆராய்ந்து இன்று அதற்கு நல்லதொரு தீர்வையும் கண்டுள்ளது. இந்த அறிவிப்பினால் ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாய்க்கும் அதிகமாகக் கூடுதல் நிதிச்சுமை ஏற்படும் என்றாலும் சாதாரண ஏழை எளிய மக்களுடன் நெருங்கிப் பழகிப் பணியாற்றுகின்ற, கிராம உதவியாளர்களின் வாழ்க்கையில், இது ஒரு புதிய வசந்தத்தை ஏற்படுத்தும் என்பதை எண்ணி நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று தமிழக அரசு வழங்கியுள்ள இந்தச் சலுகைகள், உங்களுக்குப் புதிய உற்சாகத்தையும் ஊக்கத்தையும் தரும் என்று உறுதியாக நம்புகிறேன். தமிழக அரசின் வளர்ச்சித் திட்டங்கள், மற்றும் பல்வேறு சமூகநலத் திட்டங்களின் பயன்கள், ஏழை எளிய மக்களுக்குச் சென்று அடையும் வண்ணம் உங்கள் செயல்பாட்டை வகுத்துக் கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், கிடைக்கச் செய்வதோடு, கல்வியைப் புகட்டி, அவர்களது அறிவுக் கண்களைத் திறந்து வைக்க வேண்டும் என்பதே, எனது பேரவா! இந்தக் கொள்கைகளைச் செயலாக்க, நான் மேற்கொள்ளும் அனைத்துப் பணிகளிலும், நீங்கள் அனைவரும் எனக்கு உறுதுணையாக நிற்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் அவர்தம் இன்னல்கள் களையப்பட வேண்டும் என்று முழு மூச்சுடன்- உறுதியான ஈடுபாட்டுடன் செயல்பட்டு வரும், உங்கள் அன்பு அன்னையின் அரசு, அதே ஈடுபாட்டை அடிமட்டத்தில் பணிபுரிகின்ற அரசு ஊழியர்களிடமும், காட்டி வருகின்றது. மக்களின் அனைத்துப்

பிரிவினரும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்கின்ற, ஒரு உந்துதலின் காரணமாகத்தான் கடுமையான நிதி நெருக்கடியின் நடுவிலும், நிதிப் பற்றாக்குறை நிலையிலும் நல்ல பல நலத் திட்டங்களை முனைப்புடன் தீட்டி நாளும் செயல்படுத்தி வருகின்றோம் என்பதற்கு, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நிகழ்ச்சியே ஒரு அருமையான எடுத்துக்காட்டு என்றால் அது மிகையாகாது.

கிராம நிர்வாகத்தில், கிராம உதவியாளர்களின் பணி, எத்தனை முக்கியமானது என்பதை நான் அறிவேன். அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் கிராமங்களுக்குச் செல்லும்போது, அவர்களது பணிகளைச் செவ்வனே மேற்கொள்ள, இந்தக் கிராம உதவியாளர்களை நாடுவார்கள் என்பதையும் கிராம உதவியாளர்களும் வளர்ச்சிப் பணிகளிலும், வருவாய்த்துறைப் பணிகளிலும், தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றி வருகிறார்கள் என்பதையும், நான் நன்கு அறிவேன். கிராம உதவியாளர்களின் உதவி, பல துறைகளைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைக்காதபோது, அதனால் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளையும் சிரமங்களையும் நான் நன்கு அறிவேன். எனவேதான், சிறப்பான பணிகளை ஆற்றி வருகின்ற, கிராம உதவியாளர்களின் வாழ்க்கைத் தரம் மேலும் உயர்வதற்கும் அவர்களின் பணி மேலும் சிறக்கவும் பல நல்ல முடிவுகளை இன்று நான் அறிவித்துள்ளேன்.

கிராம உதவியாளர்கள், என்றென்றும் இந்த அரசுக்கு, உறுதுணையாகச் செயல்படுவார்கள் என்று, உங்கள் சங்கத்தின் சார்பில், நீங்கள் வழங்கிய வாக்குறுதிக்கு, நான் எனது நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். அதே உணர்வுடன் உங்கள் வாழ்க்கையில் ஏற்றம் பெற, உங்கள் வாழ்வு சிறப்படைய நல்ல திட்டங்களைத் தமிழக அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்ற உறுதியையும் இந்த நேரத்தில், உங்களுக்கு அளிக்க விரும்புகிறேன். நீங்கள் அனைவரும், கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு, உறுதுணையாக இருந்து, அவர்களது நலன் காக்கும் காவலர்களாகச் செயல்பட வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் அனைவரும், வாழ்வில் எல்லா வளமும், நலமும் பெற வேண்டும் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்தி- இந்தப் பிள்ளைகளின் நலன்களைக் காக்க, இந்த அன்னை எப்போதும் ஆயத்தமாக இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

**–23-6-95 -இல், சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் சங்க மாநில மாநாட்டில் ஆற்றிய பேருரை.**

# கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு வெள்ளி ரதம்

**சென்னையை** அடுத்த திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலின் நிர்வாகத்தினர், இத்திருக் கோயிலுக்கு வெள்ளி ரதம் ஒன்றினை அமைக்க வேண்டும் என்ற கருத்துரு ஒன்றினைத் தமிழ்நாடு திருக்கோயில் வாரியத்திற்கு அனுப்பி வைத்திருந்தார்கள். அதனைப்பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக் கோயிலுக்கு வெள்ளி ரதம் ஒன்று செய்வதற்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிட்டுள்ளார்கள்.

வெள்ளி ரதம், 367 கிலோ வெள்ளியில் 12 அடி உயரத்தில், 510 சதுர அடி பரப்பளவில் 33.60 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும். இந்த ரதம் செய்யும் பணி, தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வாரியத்தின் 'பூம்புகார்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.



# டாக்டர் ஜெ.ஜெயலலிதா கல்வி உதவித் தொகைத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு உரிய பாதுகாப்பினை அளிக்கும் பணியினை மேற்கொண்டிருக்கும் தமிழகக் காவல்துறையின் ஒரு பிரிவான 'சிறப்புப் பாதுகாப்புக் குழு' (Special Security Group)வில் பணி புரிவோர் ஒவ்வொருவரும், தங்களுக்கு அளிக்கப்படுகின்ற 'இன்னல்படி' (Risk Allowance)லிருந்து முதல் மாதத் தவணையாக 1,000 ரூபாயை வழங்கி அதன் மூலம் மொத்தம் 4,00,000 ரூபாயை காவல்துறை பணியாளர்களின் குடும்பத் தாருக்கான கல்வி ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் ஒன்றினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய திருப்பெயரில் 'டாக்டர் ஜெ.ஜெயலலிதா கல்வி உதவித் தொகை' என்ற பொது நல நிதி ஒன்றினை உருவாக்கினார்கள்.

காவல்துறையில் பணிபுரியும் காவல் ஆய்வாளர் நிலைக்கும் குறைவான பணிகளில் பணி புரிவோரது குழந்தைகளின் கல்வி ஆர்வத்தை ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்துள்ள இத்திட்டத்தினை வெகுவாகப் பாராட்டிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், சிறப்புப் பாதுகாப்புக் குழுவினர் திரட்டிய 4,00,000 ரூபாயோடு சேர்த்து, அரசு சார்பில் 6,00,000 ரூபாய் நிதி உதவியினை வழங்கி, மொத்தம் 10,00,000 ரூபாய் முதலீட்டினை உருவாக்கி அதனை வைப்புத் தொகையாக அரசு நிறுவனம் ஒன்றில் இட்டு அதன்மூலம் ஆண்டுதோறும் கிடைக்கக் கூடிய வட்டித் தொகையான 1,50,000 ரூபாயிலிருந்து மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு மற்றும் தொழில் கல்வி மேல்படிப்புக் களுக்கான நுழைவுத் தேர்வு ஆகிய இரண்டிலும் சேர்த்து வெவ்வேறு தொழில் படிப்புகளுக்குத் தேர்ச்சி பெற்ற முதல் ஆறு மாணவ மாணவியர்களுக்கு முதல் பரிசாக 40,000 ரூபாயும் மற்றும் 20,000 ரூபாய் வீதம் 5 பரிசுகளும், வழங்க உரிய ஆலோசனை



களையும் வழங்கினார்கள்.

கடந்த ஆண்டு (1994) தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு (1995) 'டாக்டர் ஜெ.ஜெயலலிதா கல்வி உதவித் தொகைப்' பரிசுகளை வென்ற காவல்துறை அலுவலர்களின் குடும்பங்களைச் சார்ந்த கீழ்க்கண்ட 6 மாணவ மாணவியர்களுக்கு 29.6.1995 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நேரில் பரிசுகளை வழங்கினார்.

செல்வி எஸ். மீனாட்சி, மருத்துவம் (ரூ.40,000), திரு எம். சண்முகசுந்தரம் அவர்களின் மகள், தலைமைக் காவலர், கோயம்புத்தூர் ஊரகம்

செல்வி கே.எஸ். ராஜராஜேஸ்வரி, மருத்துவம் (ரூ.20,000) திரு கே. சுபாஷ்சந்திர போஸ் அவர்களின் மகள், காவல்துறை ஆய்வாளர், கோயம்புத்தூர் நகரம்

செல்வி வி. அனுபமா, மருத்துவம் (ரூ.20,000) திரு கே. வரதராஜன் அவர்களின் மகள், காவல்துறை ஆய்வாளர், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்

திரு சி. நாகசுப்பிரமணியன் பொறியியல் (ரூ.20,000) திரு எம்.பி. சொக்கநாதன் அவர்களின் மகன், தலைமைக் காவலர், சேலம்.

செல்வி எஸ். புவனேஸ்வரி, விவசாயம் (ரூ.20,000) திரு ஆர். சேகரன் அவர்களின் மகள், தலைமைக் காவலர், திருச்சிராப்பள்ளி

திரு ஜெ. ஷங்கர், பொறியியல் (ரூ.20,000) திரு டி. ஜெயவேலு அவர்களின் மகன், முதல்நிலைக் காவலர், கோயம்புத்தூர் மாவட்டம் (ஊரகம்)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடமிருந்து பரிசுகளைப் பெற்ற மாணவ மாணவியர்கள் 6 பேரும் தங்கள் பெற்றோர்களுடனும், குடும்பத்தாருடனும் வந்திருந்து பரிசுகளை நேரில் பெற்றுக் கொண்டார்கள்.

பரிசுகளை வென்ற மாணவ மாணவியர்கள் 6 பேருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா தன்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்களையும், அவர்கள் மென்மேலும் தங்களது மேற்படிப்பில் வெற்றிகளையும் பெற நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்கள். பின்னர், பரிசு பெற்ற மாணவ மாணவியர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுடன் புகைப்படம் ஒன்றினையும் எடுத்துக் கொண்டார்கள்.




# காயிதேமில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை

"**நா**ட்டுப் பற்று, மொழிப் பற்று, ஆகியவற்றை முன்னிறுத்தி தேசிய ஒருமைப்பாடு, மற்றும் இந்தியத் துணைக் கண்டத்தின், இறையாண்மையைப் பாதுகாக்கப் பாடுபட்ட, கண்ணியம் மிக்க காயிதேமில்லத் மொகமத் இஸ்மாயில் சாகிப் அவர்கள், நம் அனைவரின் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரியவர் ஆவார். இந்திய அரசியல் வானில், சுடர் விட்டுப் பிரகாசித்த நட்சத்திரங்களின் பொது வாழ்க்கையில் மற்றவர்களுக்கு, ஓர் எடுத்துக் காட்டாக விளங்கிய, காயிதே மில்லத் அவர்களின், பிறந்தநாள் விழாவை, இன்று துவக்கி வைத்ததில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

பொது வாழ்க்கையிலும், அரசியலிலும் ஈடுபடுபவர்கள், எப்படிப்பட்ட பண்பாட்டையும் நாகரீகத்தையும், கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்கு, ஒரு இலக்கணமாக- எடுத்துக்காட்டாக வாழ்ந்து மறைந்த, ஒரு பெரியவரின் நூற்றாண்டு விழாவைச் சீரோடும் சிறப்போடும், நாம் நடத்திக் கொண்டிருப்பது, மிகவும் ஏற்புடைய ஒன்றாகும்.

வாழ்ந்து மறைந்தவர்களின் வாழ்க்கை எல்லாம், சரித்திரம் ஆவது இல்லை. வாழ்கின்ற போது, சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும், பொது நலத்துடன் பாடுபட்டு தனது மறைவிற்குப் பின்பு, தான் வாழ்ந்த வாழ்க்கை, மற்றவர்களுக்கு வழிகாட்டியாகத்





திகழும் வண்ணம், எவர் வாழ்ந்து விட்டுச் செல்கிறார் களோ அத்தகைய சான் றோர்கள் தான், மக்கள் மனதில், என்றென்றும் நிலைத்து நிற் பார்கள்.

மதம், இனம், மொழி, இடம், காலம், ஆகிய அனைத்தையும் கடந்து, வாழும் மாந்தர் தம் மனதில், நிலையான ஒரு இடத்தை, நிச்சயம் அவர்கள் பெற்று விடுவார்கள்.

தமிழகத்தின் தென் கோடி யிலே பிறந்தாலும், இமயம் முதல் குமரி வரை பரந்து கிடக்கும் இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும், இஸ்லாமிய சமுதாய மக்களின், ஒருமித்த மதிப்பையும், அன்பையும் காயிதேமில்லத் அவர்கள், பெற்றிருந்தார்கள் என்றால் அவர் எத்தகைய உயர்ந்த குணங்களையும், உயரிய நெறிமுறைகளையும், தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து இருப்பார் என்பது, சொல்லா மலே விளங்கும்.

அத்தகைய ஒரு நல்லவரின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை, இன்று தொடங்கி வைத்ததிலும் தமிழக அரசின் சார்பில், இந்த ஆண்டு முழு வதும், எல்லா மாவட்டங்களி லும், விழா நடத்துவதற்கு ஏற் பாடு செய்ததிலும் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.


பெரியவர் காயிதேமில்லத் அவர்கள், அரசியலில் நேர்மை, பொது வாழ்வில் தூய்மை, என்ற இரண்டு அடிப்படைக் கொள் கைகளைத், தனது தாரக மந்திர மாகக் கொண்டு, செயல்பட்ட உத்தமர் ஆவார்.

இன்னல்கள், இடையூறுகள், எத்தனை ஏற்பட்டபோதும் மனம் தளராமல், அவற்றை எல்லாம் துணிவுடன் தாங்கி தனது சீரிய கொள்கைகளை, எந்தக் காலத்திலும், விட்டுக் கொடுக்காமல் வாழ்ந்தார், என்பதை அறியும்போது பொது வாழ்க்கையில் இருப்பவர் களுக்கு, காயிதேமில்லத் அவர் களின் வாழ்க்கை வரலாறு, ஒரு வழிகாட்டி நூல், என்கின்ற எண்ணமே விஞ்சி நிற்கின்றது.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களின் நலன் மட்டும்தான் முக்கியம், என்ற குறுகிய மனப் பான்மையுடன், செயல்பட்டவர் அல்ல, பெரியவர் காயிதே மில்லத் அவர்கள்.

இஸ்லாமியச் சமுதாயத்தின் வளர்ச்சியையும், இந்திய நாட் டின் மேன்மையையும் தனது இரண்டு கண்களாகக் கொண்டு செயல்பட்டார். **1920**-ஆம் ஆண்டு, அண்ணல் காந்தி யடிகள், ஒத்துழையாமை இயக் கத்தை ஆரம்பித்தபோது கல் லூரி மாணவராக இருந்த, காயிதேமில்லத் அவர்கள், நாட்டுப்பற்றினால் உந்தப்பட்டு, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். கல்லூரிப் படிப்பை உதறித் தள்ளினார்.

மொழியாலும், மதத்தாலும் வேறுபட்டாலும், இந்தியத் துணைக் கண்டத்தில் வாழ்ப வர்கள் அனைவரும், ஒரு தாய் மக்கள் என்ற உணர்வை, அனைவர் மத்தியிலும் ஊட்டி வளர்க்க, அரும்பாடுபட்டவர் பெரியவர் காயிதேமில்லத் அவர்கள்.



தான் சார்ந்துள்ள சமுதாயத்தின் நலனைவிட, ஒட்டுமொத்த நாட்டு நலன் தான், உயர்வானது என்பதைத் தனது புனிதமான எண்ணத்தாலும் புரட்சிகரமான செயலாலும் வெளிப்படுத்திக் காட்டியவர் அவர்.

இந்திய நாடு விடுதலை அடைந்த பின்னர், இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டையும், இறையாண்மையையும், கட்டிக் காக்கின்ற வகையில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியை, அவர் நடத்திச் சென்ற பாங்கு, போற்றிப் பாராட்டத்தக்கது ஆகும்.

*1945*-ஆம் ஆண்டு முதல், அவர் மறைந்த *1972*-ஆம் ஆண்டு வரை ஒரு கால் நூற்றாண்டுக்கு மேல், அந்தக் கட்சியின், செயலாற்றல் மிக்க தலைவராக விளங்கி, அருந்தொண்டாற்றினார் என்பதே, அவருக்குப் பெருமை சேர்க்கின்ற செய்தி ஆகும்.

மதம் என்கின்ற குறுகிய வட்டத்தை விட்டு அகன்று சமத்துவம், சமதர்மம், தாய்நாடு, தாய்மொழி, போன்ற பரந்த கொள்கைகளை, முன்னிறுத்திச் செயல்பட்டதால்தான் மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டு, மக்கள் மனங்களைக் கவர்ந்த, பேரறிஞர் பெருந்தகை அண்ணா மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஆகியோர், போற்றிப் பாதுகாத்த, திராவிட இயக்கத்தின் மீது காயிதேமில்லத் அவர்களுக்கு, ஒரு ஈடுபாடு ஏற்பட்டது என்றால் அது மிகையாகாது. தனது தாய் மொழியாம், தமிழ் மொழி மீது, பெரியவர் காயிதேமில்லத் அவர்கள், கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும், அளப்பரிய பற்றையும் அவர் பல முறை வெளிப்படுத்தி உள்ளார். செந்தமிழ் மொழியை, இந்த நாட்டின் தேசிய மொழியாக, ஆக்க வேண்டும் என்று, நாடாளுமன்றத்தில் முழங்கிய, அவரது தமிழ் மொழிப் பற்றினைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நமது நாடு விடுதலை அடைவதற்கு முன்பு, அரசியலில் ஈடுபட்ட அவர் அரசியல் நிர்ணய சபையில் ஓர் உறுப்பினராக இருந்து ஆற்றிய அரும்பணி, நாம் என்றென்றும் போற்றிப் பாராட்டத் தக்கது ஆகும்.

பின்னர், சென்னை மாகாண சட்டப் பேரவை, நாடாளுமன்றத்தின் மக்களவை, மாநிலங்களவை ஆகியவற்றின் உறுப்பினராக விளங்கி தனது தெளிவான கருத்துக்களையும், தூய உணர்வுகளையும், சீரிய முறையில் வெளிப்படுத்தி, சாதனை படைத்தவர், பெரியவர் காயிதேமில்லத் ஆவார். தமிழ்நாட்டிலே பிறந்திருந்தாலும், கேரள மாநிலத்தின், ஒரு நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து மக்களவைக்கு மூன்று முறை, தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பதில் இருந்தே, அவரது பரந்த மனப்பான்மையை தேசிய உணர்வை தெளிவாக வெளிப்படுத்தும் என்று கருதுகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், என்ற மாபெரும் மக்கள் இயக்கத்தை, மனித நேயத்தின் அடிப்படையில் தோற்றுவித்த, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பெரியவர் காயிதேமில்லத் அவர்களின் பெயரும், புகழும் என்றென்றும் நிலைத்து நிற்க அவரது பிறந்த நாளை, அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும் என்று, *1977*-ஆம் ஆண்டிலேயே, ஆணை பிறப்பித்தார்கள் *1983*-ஆம் ஆண்டு, கண்ணியம் மிக்க காயிதேமில்லத் அவர்களின், வாழ்க்கை வரலாறு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆணையின் பேரில், பாடப் புத்தகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு சட்டப் பேரவையில், காயிதேமில்லத் அவர்



களின், திருவுருவப் படம், 1980-ஆம் ஆண்டு, திறந்து வைக் கப்பட்டது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் அடி யொற்றி வந்த, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், கடந்த நான்கு ஆண்டுகளில் கண் ணியம் மிக்க காயிதேமில்லத் அவர்களின் திருநாமம், என் றென்றும் தழைத்திட அவர் பெயரை, புதிய மாவட்டம் ஒன்றிற்குச் சூட்டி மகிழ்ந்தேன். நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், என்றென்றைக்கும், அவரது பெயரையும், புகழையும் பரப்பிக் கொண்டிருக்கும், என் பதில் ஐயமில்லை.

இன்று காயிதேமில்லத் அவர் களின், நூற்றாண்டு விழாவைத் தமிழகத்தின் தலைநகரத்தில் தொடங்கி வைத்துள்ளேன். அவரது வாழ்க்கையைச் சித் திரிக்கும், ஒரு புகைப்படக் கண்காட்சியையும், துவக்கி வைத் துள்ளேன். அவரது பல்கலைத் திறனையும், பெருமைகளையும், பன்முக ஆற்றலையும், உயரிய பண்புகளையும், வெளிப்படுத் தும் வண்ணம், கருத்தரங்கம் ஒன்றும் நடைபெற்றுள்ளது. தமிழகத்தின் எல்லா மாவட்டங் களிலும் இந்த நூற்றாண்டு விழா, சிறப்பாகக் கொண்டாடப் படும்.

காயிதேமில்லத் மொகமத் இஸ்மாயில் சாகிப் அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு சீரோடும், சிறப்போடும் கொண்டாடிக் கொண்டிருக்கும், இந்த நல்ல வேளையில் அந்தப் பெரியவரின் நினைவைப் போற்றிடும் வண்ணம், சிறப்புத் தபால் தலை ஒன்றை வெளியிட வேண்டும் என்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, 3.6.1995 அன்று ஏற்கெனவே கடிதம் ஒன்றை எழுதியுள்ளேன்.

பெரியவர் காயிதேமில்லத் அவர்களின் திருவுருவம் பதித்த சிறப்புத் தபால் தலையை விரைவில் வெளியிட வேண்டும் என்று மத்திய அரசை நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

முகமதிய சமுதாயத்திற்குப் பல நன்மைகளைச் செய்துள்ள உங்கள் அன்புச் சகோதரியின் அரசு தமிழ்நாடு Wakf வாரிய நிறுவனங்களின் பராமரிப்பிற்கு வழங்கப்பட்ட நிதியை ஒரு சில இலட்சம் ரூபாய் என்ற நிலையை மாற்றி இன்று ஒரு கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தி உள்ளது.

இதுபோன்ற எண்ணற்ற நல்ல திட்டங்களைச் செயல் படுத்தி வரும் எங்கள் அரசு Ulema ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கையையும், ஓய்வூதியத் தொகையையும் உயர்த்தி உள்ளது.

1991-ஆம் ஆண்டு 1300 பேர் மட்டுமே பெற்று வந்த Ulema ஓய்வூதியம், கடந்த நான்கு ஆண்டுகளில் மேலும் 400 பேருக்குக் கூடுதலாக வழங்கப் பட்டுள்ளது. இன்றைய அளவில் 1700 பேர் வரை Ulema ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதில் பெருமிதம் அடைகிறேன். பல காலமாக உயர்த்தப்படாமல்



இருந்த Ulema ஓய்வூதியத்தை, *250* ரூபாயிலிருந்து *400* ரூபா யாகக் கடந்த *1.12.1994* முதல் உயர்த்தி ஆணை வழங்கினேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காயிதேமில்லத் அவர்களின் நூற்றாண்டு விழாவின் நினை வையொட்டி, *5.6.1995* வரை Ulema ஓய்வூதியத்திற்காக விண் ணப்பம் செய்துள்ளவர்களில் தகுதியான அனைவருக்குமே இன்னும் *3* மாதங்களுக்குள் Ulema ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன்' தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி, பெரியவர் காயிதேமில்லத் அவர்களின் பெயரில், சென்னையில் மணி மண்டபம் ஒன்றை அமைப்ப தற்குத் தமிழக அரசின் சார்பில், முக்கியமான ஓர் இடத்தில், நிலம் வழங்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில், மிக்க மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

"நாம் எந்தக் கட்சியை ஆதரித்தாலும், எதனுடன் கூட்டுச் சேர்ந்தாலும் சரி; இந்த நாட்டிற்கு நன்மை பயக்கிறதா, என்பதை யோசித்தே முடிவு செய்ய வேண்டும்'' என்று தெளிவான சிந்தனையுடன், தீர்க்கமான கருத்தை வெளி யிட்ட பெரியவர் காயிதேமில்லத் அவர்களின் நினைவு என்றென் றும் நமது மனதில், நீங்காமல் நிலைத்து இருப்பதற்கு உங்கள் அன்புச் சகோதரி ஆகிய நான், அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறேன். அன் னாரின் திருவுருவப் படத்தையும், இங்கே திறந்து வைத்ததில், நான் மட்டற்ற மகிழ்ச்சியும், பெரு மிதமும் அடைகின்றேன்.

பெரியவர் காயிதேமில்லத் அவர்கள், தனது வாழ்நாள் முழுவதும், கல்வியின் வளர்ச் சிக்கு ஆற்றிய அரும் பணி அவர் இந்தியாவின் சிறந்த எதிர் காலத்தின் மீது வைத்திருந்த ஒரு தொலைநோக்குப் பார்வைக்கு அடையாளம் என்றால், அது மிகையாகாது.

தான் பிறந்த பேட்டைப் பகுதியில், Young Muslim Society என்ற அமைப்பை, ஆரம்ப காலத்தில் ஏற்படுத்தினார். சென்னையில் புதுக் கல்லூரி, மலபாரில் Feroke கல்லூரி, அதிராம்பட்டிணத்தில் காதர் மொய்தீன் கல்லூரி என்று அவர் ஆரம்பித்து வைத்த பல்வேறு கல்வி நிறுவனங்கள் இன்றளவும், மத, இன பேத மின்றி, தமிழக மக்களுக்குக் கல்வித் தொண்டாற்றி வருகின் றன. மத நல்லிணக்கத்திற்கும், சகோதரத்துவத்திற்கும், கல்வி யின் மூலம், வழி வகுக்க வேண் டும், என்ற எண்ணத்துடன் செயல்பட்ட, காயிதேமில்லத் அவர்களை, நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

*1946*-ஆம் ஆண்டிலேயே சென்னை சட்டமன்றப் பேரவை யில், எதிர்க்கட்சித் தலைவராகக் கண்ணியத்துடன் செயல்பட்ட

வர் என்பது குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் ஆகும். அனைவரின் மனத்தையும் கவர்ந்த, காயிதே மில்லத் அவர்கள், சட்டமன்றத்தில் எழுந்து நின்று பேசத் தொடங்கினால், அனைவரும் அவரது பேச்சை, கூர்ந்து கேட்பார்கள் என்று இன்றும் கூறுகிறார்கள்.

அவரது வழி வந்த, திரு ஜி.எம். பனட்வாலா அவர்களும், திரு ஏ.கே.ஏ. அப்துல் சமது அவர்களும் அவரது உயர்ந்த கொள்கைகளைப் பின்பற்றி அவரது புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வண்ணம் செயல்பட்டு வருகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுவதில், பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

குறுகிய மனப்பான்மைகளையும், குறுகிய வட்டங்களையும் கடந்து தேசிய உணர்வுடன் மக்கள் நலனில் அவர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டை, நான் மனம் திறந்து பாராட்டுகிறேன். தமிழகத்தின் உயிர்மூச்சுப் பிரச்சினைகளில், அரசிற்கு முழு ஆதரவளித்து, அவர்கள் செயல்பட்ட விதம் காயிதேமில்லத் அவர்களின் உணர்வுகள், இன்றளவும் மங்கி விடவில்லை என்பதைத் தான், நாட்டுக்குத் தெள்ளத் தெளிவாக், எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் மட்டுமில்லாமல், இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும், இஸ்லாமிய சகோதர சகோதரிகள் அனைவரின் உணர்வுகளையும் இந்த அரசு உங்கள் அன்புச் சகோதரியின் அரசு மதிக்கின்றது என்பதை இங்கே நடைபெறும் இந்த விழா, கண்கூடாக எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது.

நாட்டின் நலமும், சிறுபான்மையினரின் நலனும், இரண்டு கண்களாகக் கொண்டு, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, தொடர்ந்து மக்கள் நலன் காக்கும் அரசாகச் செயல்படும் என்பதை எடுத்துரைக்கக் கடமைப் பட்டுள்ளேன். காயிதேமில்லத் அவர்களின் சீரிய சிந்தனைகளுக்கும், உயரிய இலட்சியங்களுக்கும் நாம் முழு வடிவம் கொடுப்பதே, அவருக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடன்.

# விரைவில் செயல்படவிருக்கும் தீயணைப்புக் கோட்ட அலுவலகங்கள்!

**சட்டமன்றப்பேரவையில் 10.4.1995 அன்று தீயணைப்புத் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகளின் மீது, தனது பதில் உரையை அளிக்கும் போது, தர்மபுரி மாவட்டத்திற்கும், பெரியார் மாவட்டத்திற்கும் தனித் தனியே கோட்டத் தீயணைப்பு அலுவலகங்கள் (Divisional Fire Offices) ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தார்கள், அந்த அறிவிப்பின்படி, சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களை உள்ளடக்கிய சேலம் தீயணைப்புக் கோட்டப் பிரிவினை இரண்டாகப்பிரித்து, சேலம் மாவட்டத்திற்கு எனத் தனியே ஒரு கோட்டத் தீயணைப்புப் பிரிவும், தர்மபுரி மாவட்டத்திற்கு எனத் தனியே ஒரு கோட்டத் தீயணைப்புப் பிரிவும் இயங்குவதற்குத் தேவையான அலுவலர்களும், தளவாடங்களும் வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.**

**அதேபோல, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தீயணைப்புக் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டத்தை உள்ளடக்கிய ஒரு கோட்டத்தையும், பெரியார் மாவட்டத்தை உள்ளடக்கிய ஒரு தீயணைப்புக் கோட்டத்தையும், புதிதாக உருவாக்கி ஆணை பிறப்பித்துள்ளார்கள்.**

**புதிதாக உருவாக்கப்பட்ட கோட்டத் தீயணைப்பு நிறுவனங்களுக்குத் தேவையான அலுவலர்கள், சாதனங்கள், அலுவலகத் தளவாடச் சாதனங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.**

**இந்தத் தீயணைப்புக் கோட்ட அலுவலகங்கள், அலுவலர்கள் நியமனம் செய்த பின்பு விரைவில் செயல்படத் தொடங்கும்.**

# கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் பிறந்தநாள் நூற்றாண்டு விழா

இஸ்லாமிய சமுதாயத்தின் விடிவெள்ளி, கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா 5.6.1995 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அவரைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சமூகநீதி காத்த வீராங்கனை புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் அவர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார். அப்போது காயிதேமில்லத் புகழ் வாழ்க என்று தமிழிலும், உருது மொழியிலும் வாழ்த்துக்கள் அரங்கம் முழுவதும் முழங்கின. அதனைத் தொடர்ந்து நூற்றாண்டு விழாக் கண்காட்சியும் மேடையில் இருந்த வண்ணம் பொத்தானை அழுத்தி திறந்து வைக்க அரங்கத்தின், உள்ளும் புறமும் வைக்கப்பட்டிருந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில் அழகுறக் காட்சியளித்தது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியை வெளியே திரண்டிருந்த பொதுமக்கள் அனைவரும் கண்டு களித்தனர்.

மாநில சிறுபான்மையினர் கமிஷனின் தலைவர் திருமதி பாதர் சயீத் அவர்களும், அரவக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி க. மரியம் உல் ஆசியா அவர்களும், சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜீனத் ஷெர்புதீன் அவர்களும், ஆர்க்காட்டு இளவரசர் திரு நவாப் முகமது அப்துல் அலி அவர்களும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் அனைத்திந்தியப் பொதுச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு மாநிலக் குழுவின் தலைவருமான திரு ஏ.கே.ஏ. அப்துல் சமது அவர்களும், திரு ஜி.எம். பனத்வாலா அவர்களும், தமிழ்நாடு வக்ப் வாரியத்தின் தலைவர் திரு முகமது ஆசிப் அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ் நாகூர் மீரான் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். அடுத்து, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையுரையாற்றிய பின், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சமூகநீதி காத்த வீராங்கனை புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் விழாப் பேருரை யாற்றினார். இறுயாக, செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை யாற்றினார்.

இவ்விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர். மேலும், இந்தியாவில் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த இஸ்லாமியப் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

காயிதேமில்லத் அவர்களின் பிறந்தநாள் விழாவினையொட்டி, கலைவாணர் அரங்கம் அழகுற மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்ததைப் பார்க்கும்பொழுது இது கலைவாணர் அரங்கமா அல்லது பள்ளிவாசலின் முகப்பா என்ற வினாக்கணை நம் நெஞ்சத்தில் எழுந்தது. அரங்கின் உள்ளேயும், வெளியேயும் பல்லாயிரக்கணக்கான இஸ்லாமியப் பெருமக்களும் அமர்ந்து இருந்தனர்.

காயிதேமில்லத்தின் நூற்றாண்டு விழாவைத் தமிழகம் முழுவதும் ஓராண்டுக் காலம் கொண்டாட ஆணையிட்டுள்ள மாண்புமிகு முதல்வர்

அவர்களுக்கு இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் தலைவர் திரு ஜி.எம். பனத்வாலா அவர்களும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் பொதுச் செயலாளரும் மற்றும் தமிழ்நாடு மாநிலக் குழுவின் தலைவருமான திரு ஏ.கே.ஏ. அப்துல் சமது அவர்கள்,கோலாலம்பூரில் உள்ள ஒரே நேரத்தில் 25,000 நபர்கள்தொழுகைநடத்தக்கூடிய பள்ளிவாசலின் வடிவமைப்புக்கொண்ட அழகிய நினைவுப் பரிசை வழங்கினார்கள். இந்தச் சிறப்புமிகு விழாவின் நிகழ்ச்சிகளை திரு சுதா சேஷய்யன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் தொடக்கத்தில் புலவர் புலமைப்பித்தன் அவர்களின் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. 'அண்ணாவின் தோழர்' என்ற தலைப்பில் புலவர் புலமைப்பித்தன் அவர்களும், "அரசியல் மேதை" என்ற தலைப்பில் திரு கே.எம். காதர் மொகீதின் அவர்களும், "விடுதலை வீரர்" என்ற தலைப்பில் திரு மேத்தா அவர்களும், "அருந்தமிழ் ஆர்வலர்" என்ற தலைப்பில் கவிஞர் இளந்தேவன் அவர்களும், "எளிமையின் இலக்கணம்" என்ற தலைப்பில் திரு இசட் ஜபருல்லா அவர்களும் உரையாற்றினார்கள்.

காயிதேமில்லத் நூற்றாண்டு விழாவை யொட்டி, அவரது வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி 5.6.95 அன்று தொடங்கி 12.6.95 வரை நடந்தது.

–நிகழ்ச்சித் தொகுப்பு:

அ. மதிமாறன்

## சமூகப் பாதுகாப்புத்துறையில் சிறந்த சேவை புரியும் பணியாளர்களுக்கு:

# 'தமிழக முதலமைச்சர் சமூகப் பாதுகாப்பு நற்பணிப் பதக்கம்'

கல்வித் துறையில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் 'நல்லாசிரியர் விருது' வழங்கப்பட்டு வருகின்றது. அதே போன்று சிறைத் துறை மற்றும் காவல் துறையில் சிறந்த சேவை புரியும் அலுவலர்களுக்கும் 'தமிழக முதலமைச்சர் சிறைத் துறை நற்பணிப் பதக்கம்' மற்றும் 'தமிழக முதலமைச்சர் காவலர் பதக்கம்' ஆகிய விருதுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இதே போன்று சமூகப் பாதுகாப்புத் துறையில் சிறந்த சேவை புரியும் பணியாளர்களுக்கு விருதும், ரொக்கப் பரிசும் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்து உள்ளார்கள்.

குடும்பச் சூழ்நிலை மற்றும் பொருளாதாரக் காரணங்கள் ஆகியவற்றினால், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டு, சுற்றித் திரியும் சிறுவர் சிறுமிகளை நல்வழிப்படுத்தி அவர்களுக்குக் கல்வியூட்டி, தொழிற்பயிற்சி அளித்து, அவர்களை மீண்டும் சமுதாயத்தில் பொறுப்புடன் வாழ வழிவகுக்கும் சிறந்த பணியினை ஆற்றிக் கொண்டிருக்கும் சமுதாயப் பாதுகாப்புத் துறை அலுவலர்களை ஊக்கப்படுத்தும் வண்ணம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய எண்ணத்தின் அடிப்படையில், ஆண்டுதோறும் வழங்கப்பட உள்ள இந்தத் 'தமிழக முதலமைச்சர் சமூகப் பாதுகாப்பு நற்பணிப் பதக்கம்' என்ற விருது வழங்கும் திட்டத்தின் கீழ், இரண்டு விருதுகள் இந்தத் துறையில் மிகச் சிறந்த சேவை புரியும் அலுவலர்களுக்கு வழங்கப்படும்.

இவ்விருதினைப் பெறும் துணைக் கண்காணிப்பாளர் நிலையில் உள்ள அலுவலர்களுக்கு மாதம் 25 ரூபாய் மாதாந்தரப் படியும், முதன்மைக் காவலர், இல்லத்தாசிரியர் ஆகிய நிலையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு மாதம் 20 ரூபாய் மாதாந்தரப்படியாகவும் பணி ஓய்வு பெறும் வரையில் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.



# அதிகமான மதிப்பெண் பெற்ற மாணவ-மாணவிகளுக்குப் பரிசளிப்பு:

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிவுரை

"**1995**-ஆம் ஆண்டு நடைபெற்ற, மேல்நிலைப் பள்ளி, இறுதித் தேர்வுகளில்-அதாவது Plus Two தேர்வுகளில், பல்வேறு பாடங்களில், அதிக மதிப்பெண்கள் பெற்று, சாதனை படைத்த மாணவ மாணவியர் களுக்குப் "புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அறக்கட்டளையின்" சார்பில் பதக்கங்களும், பரிசுகளும் வழங்குவதிலும், இந்த இனிய விழாவில் பங்கேற்று, அன்றலர்ந்த தாமரை மலர் போன்ற மலர்ந்த முகங்களுடன் வீற்றிருக்கும் உங்கள் அனைவரையும் காண்பதிலும், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

"ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காக உழைப்பது தான், நமது பொது வாழ்க்கை யின் அடிப்படை இலட்சியம்" என்ற மாபெரும் தத்துவத்தை, நமது மனங்களிலே ஆழமாக ஊன்றச் செய்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். இளம் வயதில் வறுமையின் காரணமாக வயிறார உணவும், அறிவை வளர்க்கும் கல்வியையும் பெற இயலாமல் தவிக்கின்ற பல்லாயிரக்கணக் கான மாணவ மாணவிகளுக்கு ஊன்று கோலாக நின்று உதவிபுரிய வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் புரட்சித் தலைவரின்

★ கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.

- தந்தை பெரியார்



நினைவாக, அவரது பெயரும் அவர் கட்டிக்காத்த இலட்சியங்களும் மனித நேயக் கோட்பாடுகளும் என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும் என்கின்ற உன்னதமான எண்ணத்துடன் தான் அவரது அடியொற்றி வந்த உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், இந்த அறக்கட்டளையை ஒரு புனிதமான உணர்வுடன் தொடங்கினேன்.

மாபெரும் மக்கள் சக்தியின் துணையுடன் புரட்சித் தலைவர் நமக்குக் காட்டிச் சென்ற புனிதப் பாதையில், நான்கு ஆண்டுகளாக மக்கள் பணி ஆற்றி வருகிறேன்.

இன்று தமிழகம் அகில இந்திய அளவில் அனைவரும் வியக்கும் வண்ணம் பல்வேறு சமூகநலத் திட்டங்களை, முனைப்புடன் செயல்படுத்தி மற்ற மாநிலங்களுக்கு- ஏன் மத்திய அரசிற்கே ஒரு முன்னோடியாக இருந்துவருகின்றது. சமூகநலத் திட்டங்கள் அதாவது- Social Sector களில் நாம் முதலீடு செய்வதை, வீண் என்று பரிகாசம் செய்தவர்கள் Populist Schemes என்று கூறி கேலியும் கிண்டலும் செய்தவர்கள், இன்று தங்கள் நிலைகளை மாற்றிக் கொண்டு, தமிழகத்தை முன்னுதாரணமாகக் கொண்டு சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்த முன் வந்துள்ளார்கள். இது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் மனித நேயக் கோட்பாடுகளுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்றால் அது மிகையாகாது.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், தொட்டில் குழந்தைகள் திட்டம், 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம் பள்ளிக் குழந்தைகளுக்கான மருத்துவ நல முகாம்கள், மகளிர் குறைகளைத் தீர்க்க அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், ஒரு இலட்சம் பெண்களுக்குச் சுயமாகத் தொழில் தொடங்கப் பயிற்சி, கட்டாயத் தொடக்கக் கல்வி- என்று பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு- உங்கள் அன்புச் சகோதரியின் அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது என்பதைக் காழ்ப்புணர்ச்சி கொண்ட சிலர் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும், பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் தமிழகத்தின் சாதனைகளை மனம் திறந்து பாராட்டி வருகின்றன.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கல்வியின் வளர்ச்சியில் காட்டிய ஈடுபாட்டை என்றென்றைக்கும் மக்கள் மனதில் நிலை நிறுத்தவே இன்று நாம் இந்த விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். மேனிலைப் பள்ளி இறுதித் தேர்வுகளில், 500 மாணவ மாணவியர்களுக்குக் குறையாமல், தேர்வு எழுதிய 45 பாடங்களில் முதல் மூன்று மதிப்பெண்களைப் பெற்ற, 135 மாணவ மாணவியர்களுக்கு 10 இலட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபாய் பணப் பரிசுகளாக மட்டும் அறக்கட்டளையின் சார்பில் வழங்க உள்ளேன். முதல் பரிசாக 10,000 ரூபாயும் இரண்டாம் பரிசாக 7,500 ரூபாயும், மூன்றாம் பரிசாக 5,000 ரூபாயும் வழங்கப்பட உள்ளன. பரிசு பெறவுள்ள அனைவருக்கும், இந்த இனிய விழாவின் நினைவு நிலைத்து நிற்கும் வண்ணம், ஒரு பதக்கமும் வழங்கப்பட உள்ளது.

இங்கே வழங்கப்பட உள்ள இந்தப் பரிசுகள், அவர்கள் தொடர்ந்து கல்வி கற்கும்

**உடனடியான பலனை, இன்பத்தை அளிக்கக் கூடியதாக மக்களது சங்கடங்களைத் தீர்க்கக்கூடியதாக எழுத்து அமைய வேண்டும். —பேரறிஞர் அண்ணா**

போது புதிய சாதனைகளைப் படைப்பதற்கு, ஆக்கமும், ஊக்கமும், அளிப்பதோடு அறக்கட்டளையின் சார்பில், வழங்கப்பட உள்ள பணப் பரிசு, சிலர் மேற்படிப்பை மேற்கொள்வதற்கும், அடிப்படையாக அமையும் என்பதை எண்ணி, நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். மாணவ மாணவி களை, உற்சாகப்படுத்தும் அதேவேளையில், அவர்கள் படிப்பைத் தொடரவும், இந்தப் பரிசு உதவும் என்பதில் ஐயமில்லை.

இன்று பதக்கங்களையும், பரிசுகளையும் பெறுகின்ற மாணவ மாணவிகளுக்கு, என் இதயங்கனிந்த பாராட்டுதல்களையும் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துகளையும் நிறைந்த மனதுடன் உரித்தாக்கிக் கொள் கிறேன். எனது அன்பிற்குரிய மாணவச் செல்வங்களே! உங்களுக்கு நான் கூற விரும்புவதெல்லாம் நீங்கள் சோதனைகளைக் கண்டு துவளாதீர்கள். பல நேரங்களில், சோதனைகளே, வெற்றிக்குப் படிக்கட்டு களாக அமைந்துவிடுகின்றன என்பதையும் மறந்து விடாதீர்கள். நேர்மையையும், உழைப்பையும், உங்கள் நிரந்தரத் தோழர்களாக்கிக் கொள்ளுங்கள். ஏற்றுக் கொண்ட பணி எத்தகையதாக இருந்தாலும், அதைச் செவ்வனே செய்து முடித்துப் பழகுங்கள். சோர்வடையாத மனதையும், வெற்றி பெற்றே தீருவேன் என்ற உறுதி யையும், வளர்த்துக் கொள்ளுங்கள்! அப்படிச் செயல்பட்டால், வெற்றி என்றென் றைக்கும், உங்களுக்குத் தான் சொந்தம் என்பதை என்னால் ஆணித்தரமாக எடுத்துக் கூற முடியும்.

புதிய சாதனைகளைப் படைக்க வேண்டும் என்கின்ற வளமான சிந்தனை யால் உந்தப்பட்டு, கொள்கை உரம் படைத்த வர்களாக, நீங்கள் அனைவரும் உருவாக வேண்டும் என்பது, எனது பேரவா. கல்வி என்ற ஆயுதத்தைக் கொண்டு சமுதாயத்தில் நிலவும் வறுமை, அறியாமை, போன்ற பிணிகளை ஒழிக்க, நீங்கள் கடுமையாக உழைத்து சமுதாய மேம்பாட்டில், புதிய சாதனைகளை நிகழ்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளி இறுதிப் படிப்பை முடித்த பின்பு, பட்டப்படிப்பைப் படிக்க வேண்டும் என்று, நான் மிகவும் விரும்பினேன். ஆனால், எனது குடும்பச் சூழ்நிலையின் காரணமாக, நான் பட்டப் படிப்பை, மேற்கொள்ள இயல வில்லை. எனவே நீங்கள் எத்தகைய ஒரு உணர்வுடன் எத்தகையதொரு மன நிலையில், இன்று இருப்பீர்கள் என்பதை என்னால் நன்கு உணர முடியும்.

நீங்கள் அனைவரும் மேலும் படித்துப் பட்டம் பெற்று- சிறந்த மேதைகளாக, நமது



# ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவர்க்கு உதவி!

**ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நன்முறையில் கல்வி பயின்று தங்களது வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையில், தமிழக அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர் தங்கியுள்ள விடுதிகள் மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிகள் ஆகியவற்றில் தங்கியுள்ள மாணவ, மாணவியர்களின் அன்றாட வாழ்க்கை மற்றும் சுகாதாரம் ஆகியவை உயர வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், தற்போது அவர்களுக்குச் சோப்பு, சிகைக்காய், எண்ணெய் முதலிய பொருட்கள் வாங்குவதற்கும், சலவை மற்றும் முடிவெட்டுதல் போன்ற செலவினங்களுக்கும் நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 5/ வழங்கப்பட்டு வந்த சில்லறைச்செலவினம், நடப்புக் (1995-96) கல்வி ஆண்டு முதல் ரூ. 10/ ஆக உயர்த்தி அளிக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தக்க ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதனால் 86741 ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவ, மாணவியர்கள் பயனடைவார்கள்.**

சமுதாயத்தின் தூண்களாக இந்த நாட்டின் எதிர்காலச் சிற்பிகளாக உருவாக வேண்டும் என்று நான் விரும்புகிறேன். வாழ்த்துகிறேன். நீங்கள் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளிலும், முழுமையான வெற்றியடைய வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன். நீங்கள் நாளை அடையப் போகும் மாபெரும் வெற்றியின் அச்சாரங்கள் தான், இங்கே வழங்கப்படப் போகும் பதக்கங்களும், பரிசுகளும் என்பதை, உங்களது எதிர்கால வரலாறு, உலகிற்குப் புரிய வைக்க வேண்டும்.

மாணவப் பருவத்தில், குறிப்பாகப் பள்ளிப் பருவத்தில், உங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து கல்வியின்பால் மனதைச் செலுத்தி, இத்தகைய சாதனைகளைப் படைக்கக் காரணமாக இருந்தவர்கள் உங்கள் ஆசிரியப் பெருந்தகைகள் என்றால், அது மிகையாகாது. உங்கள் கல்விக் கண்களைத் திறந்துவைத்து, உங்கள் வளர்ச்சிக்கு ஒரு ஏணியாகச் செயல்பட்ட பல ஆசிரியப் பெருமக்களின், கடுமையான உழைப்பை இந்த நேரத்தில் நினைவுகூர்ந்து, அவர்களுக்கு நமது பாராட்டுதல்களையும், நன்றியினையும் உரித்தாக்குவது, பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அத்தகைய நல்ல மனம் படைத்த ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும் நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாய உணர்வுடன் ஆசிரியப் பெருமக்கள், மேற்கொள்ளும் கல்விப் பணி, மென்மேலும் உயர வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

இன்று பதக்கங்களும், பணப்பரிசுகளும் வென்ற மாணவ மாணவியர்கள் அனைவரும் தங்கள் வாழ்க்கையில் மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும், புதிய எல்லைகளைத் தொட வேண்டும், சரித்திரம் போற்றும் சாதனைகளைப் படைக்க வேண்டும் என்று மீண்டும் நெஞ்சார வாழ்த்துகிறேன்.

பிறந்த வீடும், வாழ்ந்த நாடும் சிறப்புப் பெறும் வண்ணம் பயனுள்ளதொரு வாழ்க்கை வாழ்ந்து, உங்கள் கடமைகளைச் செவ்வனே ஆற்றுகிற ஆற்றலை- எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு வழங்க வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

**—22.6.1995 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய சிறப்புரை.**

# உலகின் முதல் மொழிக்கு உயர்வளித்த முதல்வர்!

## மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள்

**த**மிழர் கண்ட சமுதாயத்தின் தலை சிறந்த தலைவியாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திகழ்ந்து கொண்டிருக் கிறார்கள். அறிஞர் அண்ணா 2-வது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். 5-வது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார். அறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய இருபெரும் தலைவர்களின் ஒரே வாரிசான ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஓங்குபுகழ்த் தலைவி நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 8-வது உலகத் தமிழ் மாநாட்டை உலகமே வியக்கும் வண்ணம் ஈடு இணை யற்ற முறையில் இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உலகத்தின் முதன்மையான மொழி தமிழ் மொழிக்கு, இந்திய முதல்வர்களில் முதன்மையான நம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் மகத்தான மாநாடு காண்பதுதான் சாலப் பொருத்த மாகும்.

தமிழகத்தில் கடையேழு வள் ளல்கள் தோன்றினார்கள். அந்த 7 வள்ளல்களும் மக்களைக் காத்து, புலவர்களைப் போற்றி, மாத்தமிழ் காத்து வளர்த்தார்கள். அந்த 7 வள்ளல்களும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியென, ஒருருவில் வந்தது போல் மண்ணைப் போற்றிக் கன்னித் தமிழைக் காத்து வருகிறார்கள். அதன் மெய்ப் பாடுதான் இந்த மாபெரும் உலகத் தமிழ் மாநாடாகும்.

கொடையில் ஈடிணையற்றவர் களாக, வரிசையறிந்து வழங்கு பவர்களாக, இரக்க உள்ளம் கொண்டவர்களாக, இசையிலும், கூத்திலும் ஈடுபாடு உடையவர் களாக, இரப்போர்க்கு இல்லை யெனாது அளிக்கும் ஈகை மனம் கொண்ட வள்ளல்களின் ஒரே வடிவாக இருக்கின்ற காரணத் தினால்தான், சரியான பணி எனக் கருதித் தந்தை பெரியார் அவர்களின் அறக்கட்டளைக்கு நிதி தந்தார். தன்னைத் தேடி வருபவர்களுக்கு மட்டுமல்லா மல், சமுதாயத்தில் துன்பப்படு கிறவர்கள் எங்கெங்கிருக் கிறார்கள் என்று தேடி உதவி வழங்குவதில் வள்ளலுக்கெல் லாம் வள்ளலாக இருப்பவர் அருள் நெஞ்சம் படைத்த நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள்தான்.

தஞ்சை மாவட்டமே இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது. பழைய சோழ நாட்டைப் பார்த்தது போல் இருக்கிறது என்று சொல்லி, சில பத்திரிகைகள்கூட மறுக்கமுடியாத சில உண்மைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உலகம் முழுவதிலுமிருந்து தமிழ் அறிஞர்கள் இந்த விழாவுக்கு வருகை தந்திருக்கிறார்கள். உண்மையான தமிழ் மொழிப் பற்றும் உணர்வும் கொண்ட வர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தஞ்சை மண்ணின் வளம்நாடி காவிரி நீர் கேட்டு 85 மணிநேரம் தன்னை வருத்திக் கொண்டு தவம் இருந்த பொன்னெழுத்துத் தலைவிதான்,



# வரலாற்றுப் பெட்டகங்கள்!

**த**மிழகத் திருக்கோயில்கள் தொன்மையானவை. அவை தெய்வீக வழிபாட்டுத் திருத்தலங்கள் மட்டுமின்றி, நம் பண்பாட்டுச் செழுமையையும், வரலாற்றுச் சிறப்பினையும், நமக்கு இன்றும் எடுத்துரைக்கும் அரிய கலைச் செல்வங்கள்.

தமிழகத்திலுள்ள திருக்கோயில்களை ஒருமுறை தரிசித்து வந்தாலே, தமிழகத்தின் பழம்பெருமை வாய்ந்த வரலாற்றுப் பின்னணியை நாம் நன்கு அறிந்துகொள்ள முடியும்.

அத்தகைய திருக்கோயில்கள் ஒவ்வொன்றும் நம் முன்னோர்கள் நமக்காக விட்டுச் சென்றுள்ள அரிய கலைப் பொக்கிஷங்களாகும். சரித்திரப் புகழ்பெற்ற தொன்மையான நமது சமூகத்தின் பண்பாட்டு நிலைக்கலன்களாகவும், நாகரிகத்தின் சின்னங்களாகவும், வரலாற்றுப் பெட்டகங்களாகவும் அவை இன்று விளங்குகின்றன.

தொன்றுதொட்டு, நமது கலாச்சாரக் கருவூலமாக விளங்குகின்ற நமது திருக்கோயில்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை, ஒவ்வொரு இந்தியருக்கும் உண்டு.

நமது வருங்காலச் சந்ததியினருக்கு இந்தக் கலைச் செல்வங்களை அழியாது, பேணிப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டுமென்ற மாபெரும் கடமையை ஆற்றத்தான், எங்கள் அரசு பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதன் முக்கியத் தொடர் நடவடிக்கையாக, மாநில அளவிலான திருக்கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்பட்டது.

**புரட்சித்தலைவியின் முழக்கம் தொகுதி-1 என்னும் நூலிலிருந்து.**

---

அதே தஞ்சையில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வந்த பிறகுதான் தமிழகத்திலும், கடல் கடந்த நாடுகளிலும் தமிழ் மணம் பரவிக் கிடப்பதைத் தமிழார்ந்த நெஞ்சங்கள் அறியும். மலையில் பிறந்து, புகழைக் கடந்து, கலைகளில் சிறந்த தமிழ் மணம் இந்த மாநாட்டில் பரவிக் கிடக்கிறது. நற்குடியில் பிறந்த பெருமக்கள் நிச்சயம் இந்த மாநாட்டை - மனதாரப் பாராட்டிக் கொண்டிருப்பார்கள்.

சிலம்புச் செல்வர் அவர்கள் 'பாரதி பிறந்த மண்' என்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆம். திருவல்லிக்கேணியில், அமரகவி பாரதியார் அவர்கள் வாழ்ந்த வீட்டினை அரசின் நினைவிடமாக ஆக்கியவர் புரட்சித் தலைவி அவர்கள்தான். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை வாழ்ந்த நாமக்கல் வீட்டினை அரசின் சார்பில் நினைவிடமாக ஆக்க உத்தரவிட்டிருப்பவர்களும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்தான். கவியரசர் கண்ணதாசன் அவர்களுக்கு காரைக்குடியிலே மணிமண்டபத்தையும், தலைநகரில் சிலையையும் திறந்து வைத்திருப்பவர் தன்னிகரில்லாத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள்தான். தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் நினைவாகத் தலைநகரில், சென்னையில் சிலை அமைக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருப்பவர்களும் புரட்சித் தலைவி அவர்கள்தான். அமரர் ஜீவா அவர்கள் வாழ்ந்த வீட்டை அரசு சார்பில் நினைவிடமாக மாற்ற வேண்டும் என்று அன்ப வேண்டுகோள் விட்டவரும் புரட்சித் தலைவி அவர்கள்தான். குமரி மாவட்டம் தமிழ் வீரர் செண்பகராமன் நினைவாக, சென்னையில் சிலை வைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விட்டிருப்பவரும் புரட்சித் தலைவி அவர்கள்தான். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த ஊரான பட்டுக்கோட்டையில் அழகான நினைவகம் அமைக்க வேண்டும் என்று ஆணையிட்டிருப்பவரும் புரட்சித் தலைவி அவர்கள்தான். மறைந்த தமிழ் அறிஞர்களை மதித்து அவர்களின் நினைவைப் போற்றுவதில் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அரசு யாருக்கும் குறைந்ததல்ல. சங்க காலத்து மன்னர்கள் மண்ணைப் போற்றினார்கள், மக்கள் நலன் காத்தார்கள், அன்னைத் தமிழின் புகழை அவனிக்குப் பரப்பினார்கள். அதே வகையில்தான் அருமை அன்னை... இன்று

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டைச் சீரோடும் சிறப் போடும் நடத்திக் காட்டிக் கொண்டிருக்கிறார்.

தமிழர் கண்ட சமுதாயத்தின் தத்துவத் தலைவியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவி யின் ஆட்சியில் பெண்களை மேம்படுத்தத் திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மகளிர் காவல் நிலையங்கள், தொட்டில் குழந்தைகள் நலத் திட்டம், பெண்கள், குழந்தைகள் நலம் காக்க 15 அம்சத் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்கள் இந்த ஒரு செயலுக்காக மட்டுமே தமிழ்ச் சமுதாயம், எக்காலமும், காலம் உள்ள வரைக்கும் புரட்சித் தலைவி அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கும். 69% இட ஒதுக்கீடு பெற புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளை, உலகமே வியந்து நோக்கிப் பாராட்டிக் கொண் டிருக்கிறது. அன்னைத் தமிழின் பெருமையை அகில உலகெங் கும் உயர்த்திட அயராது பாடு பட்டுவரும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை, நாளைய சமுதாயம் நிச்சயமாகப் பாராட்டும்.

வள்ளுவன் தன்னை உலகி னுக்குத் தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு என்று முன்பு பாடினோம். இன்று, புரட்சித் தலைவிதனை இப் புவிக்குத் தந்து புண்ணியம் பெற்றது தமிழ்நாடு என்று பாடிக்கொண்டேயிருப்போம்.

**(எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - மூன்றாம் நாள் கருத் தரங்கில், முன்னிலை வகித்து ஆற்றிய உரையிலிருந்து)**

# மன வளர்ச்சி குன்றிய 3 சிறுவர்கள் உலக விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள



## –மாண்புமிகு முதல்வர் உதவி!

மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்குக் கல்வி மற்றும் பயிற்சி அளித்து வரும் சென்னையைச் சேர்ந்த துர்காபாய் தேஷ்முக் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பயிற்சிப்பள்ளியின் நிர்வாகி, தங்களது பயிற்சிப் பள்ளியைச் சேர்ந்த மூன்று சிறுவர்களுக்கு வாலிபால் விளையாட்டில் சிறப்புப் பயிற்சி அளிக்கவும், அமெரிக்க நாட்டிலுள்ள New Haven என்ற நகரில் நடைபெறும் உலகக் கோடைக்கால (World Summer Games) விளையாட்டுப் போட்டி களில் பங்கேற்க நிதி உதவியும் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு கருணை மனு ஒன்றினை அனுப்பி வைத்திருந்தார்.

அந்தக் கருணை மனுவினைக் கருணையோடு பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இந்த மன வளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான பயிற்சிப் பள்ளியில் பயிலும் மூன்று சிறுவர்களும், அமெரிக்காவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள ஏதுவாக, தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சி (Sports Development Authority of TamilNadu) ஆணையத்தின் சார்பில், ஒவ்வொருவருக்கும் 18,000/ ரூபாய் வீதம் மூன்று சிறுவர்களுக்கு ரூ 54,000 மற்றும் அவர்களது பயிற்சியாளர்களுக்கும் ரூ 18,000 ஆக மொத்தம் 72,000 ரூபாய் வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

# தமிழகத் திட்டங்களுக்கு

# ராஜஸ்தான் மாநில முதல்வர் பாராட்டு!

**மா**ண்புமிகு ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் திரு. பைரான் சிங் ஷெகாவத் 3.7.1995 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்கள். இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது.

தமிழகத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளைப் பற்றியும், பல்வேறு திட்டங்களைப் பற்றியும், தமிழகத்திலுள்ள தொன்மைவாய்ந்த கலைச் சிறப்புகள் மிகுந்த புராதன திருக்கோயில்களைப் பராமரிப்பதற் காக எடுக்கப்பட்டு வரும் சீரிய நடவடிக் கைகள் குறித்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திருக்கோயில்களை நன்முறையில் பராமரிப்பதற்காக, "முதலமைச்சர் திருக்கோயில்கள் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி" (Chief Minister's Temple Renovation and Maintenance Fund) ஏற்படுத்தியது பற்றியும், திருக்கோயில் நிர்வாக வாரியம் (Temple Administration Board) அமைத்தது குறித்தும், அவற்றின் செயலாக்கம் குறித்தும், ஒரு காலப் பூசை கூட நடை பெறாமல் இருந்த ஆயிரக்கணக்கான கோயில்களுக்கு 25,000 ரூபாய் வீதம் ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்தி அதன்மூலம் ஒருகாலப்பூசை நடத்தும் திட்டத்தைச் செயல்படுத்தி வருவதைக் குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். மேலும், புராதன திருக்கோயில்களைப் பராமரிக்கவும், கும்பாபிஷேகம் நடைபெறவும், உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்கவும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் விளக்கினார்கள்.

திருக்கோயில்களின் புனரமைப்பிற்காகத் தமிழகத்தில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை ராஜஸ்தான் மாநிலத்திலும் அமல்படுத்த, மாண்புமிகு ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் விருப்பம் தெரிவித்ததன் பேரில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளரை உடனடியாக ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, தமிழகத்தில் செயல்படுத்தி வரும் திட்டங்கள் பற்றிய விவரங்களைக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மேலும், தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் குடும்ப நலத் திட்டம் (Family Planning Programme), 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம் (15 Point Child Welfare Programme) ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்காக நடை முறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத் திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

ராஜஸ்தான் மாநிலத்தில் பழுப்பு நிலக்கரி (Lignite) கிடைப்பதால் அதை உபயோகித்து மின்சாரம் தயாரிக்க ஜெயங்கொண்டம் அனல்மின் நிலையத் திட்டத்தைப்போல் ஒன்று உருவாக்கு வதற்காகத் தமிழகத்தில் செயல்படுத்தி வரும் அனல்மின் நிலையத் திட்டங்களைப் பற்றி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர் களிடம் கேட்டறிந்தார்கள்.

இறுதியாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை, ராஜஸ்தானுக்கு வருகை தர வேண்டும் என்று மாண்புமிகு ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்தார்கள்.

நான்காம் ஆட்டம் சொல்லும் செய்தி:

# மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ராணி அம்மையார் பாராட்டு



**பே**ரறிஞர் அண்ணாவின் நூல்கள் அரசுடைமை ஆக்கப் பட்டதற்குப் பேரறிஞர் அண்ணாவின் துணைவியார் திருமதி ராணி அம்மாள் அவர்கள், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார். அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

எனது கணவர் எழுதிய நூல்கள் அரசுடைமை ஆக முதல்வர் முயற்சி எடுத்து அரசுடைமை ஆக்கி விட்டதற்கான அறிவிப்பை வெளியிட்டு இருப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

முதல்வர் எனது கணவரின் படைப்புகளை அரசுடைமை ஆக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்று சொன்னார். சொன்னபடி செய்திருக்கிறார். அதற்காக என் குடும்பத்தின் சார்பிலும், என் கணவர் மீது அளவற்ற பாசத்தைப் பொழிந்த தமிழ் மக்கள் சார்பிலும் முதல்வர் ஜெயலலிதாவுக்கு மனப்பூர்வமான பாராட்டுதல்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு திருமதி ராணி அம்மாள் அவர்கள் கூறினார்.

அண்ணா அவர்களின் மகன் டாக்டர் சி.என்.ஏ.பரிமளம், திருமதி சரோஜா பரிமளம் ஆகியோர் கூறியதாவது:


1991-ஆம் ஆண்டு முதல்வராகப் புரட்சித்தலைவி பதவியேற்றதற்குப் பிறகு, அண்ணாவின் பிறந்த நாளை, செப்டம்பர் 15- ஆம் தேதி முதன் முதலாகக் கொண்டாடிய போது, அம்மாவுக்கு (ராணி அம்மாளுக்கு) 5 லட்சம் ரூபாய் அன்புக் காணிக்கையாக முதல்வர் புரட்சித்தலைவி வழங்கினார்.

அப்போது உங்களுக்கு வேறு என்ன செய்ய வேண்டும் என்று முதல்வர் கேட்டார். வேறு எதுவும் எங்களுக்கு வேண்டாம். அண்ணாவின் படைப்புகளை ஏழை, எளிய மக்கள் படித்துப் பயன்பெறத்தக்க வகையில் மலிவு விலையில் புத்தகங்கள் வெளியிட அவரது நூல்களை அரசுடைமை ஆக்கினால் போதும் என்று சொன்னோம்.

**அண்ணா பெயரிலான அரசு அண்ணாவின் படைப்புகளை அரசுடைமை ஆக்குவதைத் தனது கடமையாகக் கருதி, அரசுடைமை ஆக்கி இருக்கிறது. இதற்காக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியை மனப் பூர்வ மாகப் பாராட்டுகிறோம். அரசுடைமை ஆக்கப்பட்டதை அறிந்து அளவில்லா மகிழ்ச்சி அடைந்தோம்.**

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# கிசான் விகாஸ் பத்திரம்
# செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்




## சிறப்பு அம்சங்கள்

- 5 1/2 ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.

*மேலும் விவரங்களுக்கு அணுகவும் :*

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,

'ட்யர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

DIRP/DIS/95



# நன்னிலத்தில் மாநில அளவிலான பாவேந்தர் பிறந்தநாள் விழா:

## மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு


**பா**ட்டுத் திறத்தால் பைந் தமிழ் நாட்டைப் பாலித்தவர் புரட்சிப் பாவேந்தர் பாரதி தாசன் ஆவார். அவர்களின் பிறந்தநாள் பெருவிழா, நற்றமிழ் காக்கும் வித்தக அரசின் சார்பில் நன்நாகை என்று போற்றப்படும் நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் நன்னிலத்தில் **(30.6.95)** சிறப்புற நடைபெற்றது.

**தொடக்கவுரை**

விழாவில் - செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் தொடக்க உரையில் பேசியதாவது:

"மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனைபேரில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு விழா எடுத்துக் கொண்டிருக்கிறோம். மிகச் சிறந்த கவிதைகளை இயற்றி, சமுதாய மறுமலர்ச்சிக்கு அடிகோலிய அத்தகைய மிகச் சிறந்த ஒரு புரட்சிக் கவிக்குப் பிறந்த நாள் விழா எடுத்துக் கொண்டிருக்கிறோம். இத்தகைய பெரும் தலைவர்களை- நாட்டுக்காக உழைத்தவர்களை நல்லது செய்தவர்களை, யாருடைய வாழ்க்கையை எல்லாம் நாம் அறிந்துகொள்ள வேண்டுமோ, அவர்களுடைய வாழ்க்கையின் கருத்துக்களையெல்லாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற இந்த வகையில் தான் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா அரசு சார்பிலே நடந்துகொண்டிருக்கின்றது. புரட்சிக் கவிஞர் அவர்கள் பொது உடைமைச் சமுதாயத்தைக் காண- போர் அற்ற புதியதோர் உலகம் செய்ய முழங்கியவர்.

"இத்துணைச் சிறந்த கவிஞன்



நமக்குக் கிடைத்தது- இந்தச் சமுதாயத்திலே ஒரு மறுமலர்ச் சிக்கு வழி கோலியது - நமக்குக் கிடைத்த பெருமை.

> ★ கலைகள் மக்களின் அறிவை வளர்ப் பதாக இருக்க வேண்டுமே அல்லாது, அவர்களை மடமையில் ஆழ்த்துவதாக இருக்கக்கூடாது.
>
> - தந்தை பெரியார்

**சிறப்புரை**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோம சுந்தரம் அவர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கி விழா சிறப்புரையாற்றும்போது:

"கோடான கோடி மக்கள் இருக்கின்ற இடத்தில் கோடிக் கணக்கானவர்களில் ஓரிரு வருக்கு மட்டும் விழா எடுத்துக் கொண்டாடிக் கொண்டிருக் கிறோம் என்று சொன்னால், ஏன்- என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் எல்லாம் வாழ்கின்றபொழுது தனக்கா கவும், தன் குடும்பத்திற்காகவும் மட்டுமே வாழாமல், நாட்டு மக்களுக்காக, சமுதாயத்திற்காக வாழ்ந்தவர்கள். அப்படி சமுதாயத்திற்காக வாழ்கின்ற வர்களை நினைவுகூரும் வகையில்தான், இப்படிப்பட்ட விழாவைக் கொண்டாடு கிறோம். இப்படித்தான் பாரதி தாசனை எண்ணிப் பார்க் கின்றபோது நாம் ஏன் அப்படி வரக்கூடாது, ஏன் வர முடியாது என்ற உணர்வுகளை மாணவ மாணவியர்களும் பெறுவதற்குத் தான் இப்படிப்பட்ட விழா, இங்கே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தலைமை யிலான தமிழக அரசால் கொண் டாடப்படுகிறது.

மொழிக்காகவும், நாட்டைக் காக்கவும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் பலரும் இருந் ததனால்தான்; இந்தியத் துணைக் கண்டம் விடுதலை அடைந்தது. இந்தியத் துணைக் கண்டம் விடுதலை அடைவதற் காகப் பாடுபட்டவர்கள், பல் வேறு இயக்கத்தைச் சேர்ந்த வர்கள்.

"நம்முடைய புரட்சிக் கவிஞர் அவர்கள் மொழிப் போராட் டத்திற்குத் துணை சென்றவர்; **1927**-இல், இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாகக் குடும்பக் கட்டுப் பாட்டைப் பற்றிப் பாடியவர்".

**தலைமையுரை**

விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் விழாத் தலைமை யேற்றுப் பேசும்போது:

"இன்றைக்குத், தமிழ்நாடு அரசு தமிழர் நலம் பேணும் அரசாக, ஏழை எளியவர் களுக்கும், அடித்தள மக்களுக் கும், அற்புதமான திட்டங்களை அறிமுகப்படுத்தும் அரசாக அடித்தள மக்களுக்கு- ஒடுக்கப் பட்ட, பிற்படுத்தப்பட்ட நலிந்து போன, மெலிந்துபோன, வாடிப் போன, வதங்கிப்போன, வாழமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிற மக்களை வாழவைக்கிற அரசாக, வறு மைக்கே வறுமையை ஏற்படுத் தும் அரசாக, ஏழ்மைக்கே ஏழ்மையை ஏற்படுத்தும் அரசாக மட்டும் நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர் களின் அரசு செயல்படவில்லை; நாட்டுக்கு உழைத்தவர்களை மக்கள் மனதிலே நிலைக்க வைக்க வேண்டும் என்ற வகையிலேயும், நாட்டிற்குத் தேவையான கருத்துக்களை யார் எந்த வடிவத்திலே சொல்லியிருந் தாலும் அப்படிப்பட்டவர்களை யெல்லாம் போற்ற வேண்டும் புகழ வேண்டும் என்ற வகை யிலேயும் நம் புரட்சித்தலைவி அவர்களின் அரசு செயல்பட்டு வருகின்றது.

"வீரர்களுக்கு விழா எடுப்பது, வித்தகர்களுக்குச் சிலை வடிப் பது, இவர்களையெல்லாம் மக்கள் மனதில் நிலைப்படுத் துவது யார்? யார் பெருமைக் குரியவர்களோ, யார் பாராட்டுக் குரியவர்களோ, யார் யார் மண்ணிற்குப் பெருமை சேர்ப்ப வர்களோ, யார் யார் இனத் திற்காக- நாட்டிற்காக உழைத் திருக்கிறார்களோ, பாட்டுத்திறத் தாலே சமுதாயக் கொடுமை களைப் பாடியிருக்கிறார்களோ, அப்படிப்பட்டவர்களையெல்லாம் பெருமைப்படுத்த டாக்டர் புரட்சித்தலைவி அரசு என் றைக்கும் தயங்கியது இல்லை என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில்தான், புரட்சிக் கவிஞரின் பிறந்தநாள் விழாவை எழிலோடும், ஏற்றத்தோடும், சீரோடும், சிறப்போடும் கொண் டாடிக் கொண்டிருக்கிறோம்.

"எத்தனையோ கவிஞர்கள் இந்த மண்ணிலே தோன்றி

யிருக்கிறார்கள். கவிதைகள் தந்திருக்கின்றார்கள். ஆனால், கவிதைகள் வடிப்பவர்கள் அத்துணைப் பேருமே கவிஞர்கள் அல்ல. அப்படி வடித்த கவிதைகள் அனைத்தும் நிலை பெறுவது இல்லை. எந்தக் கவிதை மக்களுக்குப் பயன் படுகிறதோ, எந்தக் கவிதை புரட்சியை உருவாக்குகின்றதோ எந்தக் கவிதை அந்தக் கவிஞர்கள் மறைந்த பின்னும், நிலைத்து நிற்கின்றதோ, அத்தகைய கவிதைகளைத் தந்த பெருமை புரட்சிக் கவிஞருக்கு உண்டு.

"இந்த மண்ணிலே பூக்கின்ற பூக்கள் எல்லாம் பூசைக்குச் செல்லுவதில்லை. மண்ணிலே மலர்கின்ற மலர்கள் அனைத்தும் மணம் தருவதில்லை!

"எல்லாக் கவிஞர்களின் கவிதைகளுமே என்றும் நிலைத்திருப்பதில்லை. ஆனால், மங்காப் புகழ்பெற்ற வரிகளாக அவர் மறைந்த பின்பும், இன்றைக்கும் புரட்சிக் கவிஞருடைய பாட்டுக்கள் நிலைத்து நிற்கின்றன.

"வீட்டிலே நாள்தோறும் விளக்கு ஏற்றுகிறோம். அந்த விளக்கெல்லாமே பெருமை சேர்ப்பதில்லை. ஆனால், ஆண்டிற்கு ஒருமுறை ஏற்றப்படுகின்ற கார்த்திகைத் தீபத்திற்குத்தான் சிறப்பு ஏற்படுகிறது. அதேபோல, அத்தகைய சிறப்புக்குரியவர்களை, கவிதைச் சிறப்புக்களை மக்கள் மனதிலே என்றைக்கும் நிலைத்து நிற்கின்ற கவிதைகளைப் பாரதிதாசன் மறைந்தாலும், பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம் சாய்ந்தும் சாயாதிருப்பது போல, அவருடைய கவிதைகள் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றன. மக்களுக்குப் பயன்பாட்டைத் தந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய கவிஞரைத்தான் நாம் "புரட்சிக் கவிஞர்" என்று சொல்லுகின்றோம்.

"பெண்ணினம் பெருமைப்பட வேண்டும், பெண்ணடிமை தீர்க்கப்பட வேண்டும், விதவைக்கு மறுமணம் வேண்டும் என்று சொன்னவர். "கோரிக்கை அற்றுகிடக்கிறதே வேரில் பழுத்த பலா" என்று சொன்னவர் புரட்சிக் கவிஞர் அவர்கள்.

"பெண்கள் இந்த நாட்டின் கண்கள் என்று கூறி, பெண்ணுரிமைக் காவலனாகக் கவிதைகளைத் தந்த புரட்சிக் கவிஞருடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற தலைவியாகத்தான் இன்று நமது புரட்சித்தலைவி அவர்கள் இருக்கின்றார்கள்".

**விழாப் பேருரை**

பாவேந்தரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழாப் பேருரையாற்றும்போது:

"இன்று நன்னிலமே விழாக் கோலம் பூண்டு நிற்கிறது. நன்னீரைப் பாய்ச்சுகின்ற காவிரி நீர் பாய்கின்ற நன்னிலத்தில் இந்த விழா நடைபெறுவது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. டாக்டர் புரட்சித்தலைவியின் சீரிய தலைமையின் கீழ் மக்களுக்கு அன்பையும், அரவணைப்பையும் பெற்று, பிறருடைய போற்றுதலையும், பாராட்டுதலையும் பெற்று, எல்லோருடைய மதிப்பையும் மரியாதையையும் பெற்று இன்று நடைபோட்டுக் கொண்டிருக்கின்ற தமிழக அரசு, பல்வேறு சீரிய பணிகளைச் செம்மையாகச் செய்து முடித்திருக்கிறது.

"தமிழகத்தில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எப்படிப்பட்ட பணிகளை எல்லாம் செய்து வருகிறார்கள் என்பதை விளக்கமாகக் கோடிட்டுக் காணப்போவோமேயானால் நேரம் போதாது.

"பேரறிஞர் அண்ணா ஜனநாயக நெறிமுறையை- தந்தை பெரியார் கொள்கை முறையை- டாக்டர் எம்.ஜி.ஆர் வள்ளல் முறையை அடிப்படையாக வைத்துத்தான் டாக்டர் புரட்சித்தலைவியின் அரசு பணியாற்றிக்கொண்டு வருகிறது.

"தமிழகத்தில் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காணப்பட்டவர் பாரதியார். அவரைப் பின்பற்றி வாழ்ந்தவர்



★ அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும், ஆற்றலும் சேர்ந்து உழைத்தால், வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். வேண்டப்படாத பழமையை அழித்து, வேண்டப்படும் புதுமைக்குத் தனி வரலாறு அளிக்கக்கூடியவன் எவனோ, அவன்தான் புரட்சிக்கவிஞன். இன்றைய சமுதாயத்தில் பெரும்பாலான இளைஞர்கள் உணர்ச்சி கொண்டவர்கள்; அவர்களையெல்லாம் ஈர்த்து ஒரு குறிப்பிட்ட கொள்கைக்கு கோட்பாடுகளுக்கு, திட்டங்களுக்கு, குறிக்கோளுக்கு மதிப்பளித்து, அவற்றை இதயத்தில் வைத்து, அந்தக் கருத்துக்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து உருவாக்கிய பேறு பாரதிதாசனுக்கு உண்டு. அப்படி உசுப்பி விடுகின்ற தன்மையைப் பெற்றவர் அவர்.

"இவை செய்யவேண்டியவை இவை செய்யக்கூடாதவை என்று அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொன்னவர் புரட்சிக் கவிஞர். அருமையாக எதுகை மோனையோடு கவிதைகள் எழுதி வடிவம் தந்து, அவை ஆயிரம் ஆயிரம் ஆண்டுக்காலம் தங்கத் தக்க அளவிற்கு ஆளாக்கிய பெருமை புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு உண்டு.

"புரட்சிக் கவிஞர்தம், வாழ்நாள் எல்லாம் எவ்வளவோ அருமையான பாடல்கள் பாடி





★ வேற்றுமையில்லாத மனித சமுதாயம் வேண்டுமென்பதுதான் நமது குறிக்கோளே ஒழிய, வேற்றுமை பாராட்டி யாரையேனும் ஒதுக்கிவைக்க வேண்டுமென்பது அல்ல நமது குறிக்கோள்.

உணர்ச்சியையும் எழுச்சியையும் ஊட்டி இந்த நாட்டிற்கு ஏற்றமும் எழிலும் தந்தார். பண்டிதர்கள் மட்டுமே பழகிவந்த பழகு தமிழைப் பாமரரும் புரிந்து கொள்ளுகின்ற அளவுக்குக் கொண்டுவந்தார். அரண்மனையிலே இருந்த அழகு தமிழை ஆலமரத்தடிக்குக் கொண்டு வந்தார்.

"இப்படிப் பல்வேறு சிறப்புக்குரிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், 75 ஆண்டுகள் வாழ்ந்து 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரும்பெரும் பாடல்களைப் பாடி மக்களுக்கு எழுச்சியும், உணர்ச்சியும் ஊட்டியவர்".

—முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஆர். பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு வருகைதந்தவர்களை வரவேற்றார். பின்னர், தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு ஓ.எஸ். மணியன் அவர்கள் முன்னிலையுரையாற்றினார். அதனைத் தொடர்ந்து சிறுசேமிப்புத் துறையின் துணைத் தலைவர் டாக்டர் பெ. பரந்தாமன், சட்டமன்ற உறுப்பினர் திரு எல். ஆசைமணி, திரு டாக்டர் கே. கோபால் ஆகியோர் இவ்விழாவில் சிறப்புரையாற்றினார்கள்.

விழாவில் பல்வேறு துறையிலிருந்து 559 நபர்களுக்கு 71,13,700 ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள்.

நன்னிலத்தில் நடைபெற்ற இந்தச் சிறப்புமிகு புரட்சிக் கவிஞர் பிறந்தநாள் விழாவில், புகைப்படக் கண்காட்சிகளும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், கருத்தரங்கம், நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. விழா முடிவில்- அரசு சாதனை விளக்கச் செய்திப்படங்களும், 'கலங்கரை விளக்கம்' திரைப்படமும் காண்பிக்கப்பட்டது.

விழா முடிவில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்-(நினைவகங்கள்) திரு அரிகிருஷ்ணன் நன்றி நவின்றார்.

**-எல். கிரிராஜன்**
உதவி மக்கள் தொடர்பு - அலுவலர் - (விளம்பரம்)
நாகப்பட்டினம்-
காயிதேமில்லத் மாவட்டம்

## சங்கத் தமிழ்ச் சோலை

ஆசிரியர்: தங்கவயல் லோகிதாசனார்

வெளியீடு: கலைவாணர் பதிப்பகம்
3/17, சத்தியமூர்த்தி நகர்,
நந்தனம், சென்னை-35

விலை: ரூ.40 பக்: 263

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடியாக விளங்குபவை. அக்கால வாழ்க்கை, கலை, நாகரிகம், பண்பாடு முதலான தன்மைகளை உலகுக்குப் பறை சாற்றுபவை. சங்க கால இலக்கியங்கள், தமிழின் அருமை பெருமைகளை உணர்த்தும் அதே வேளையில், தமிழர்களின் அக வாழ்வையும், புறவாழ்வையும் படம் பிடித்துக் காட்டுவன. அத்தகைய காட்சிகளையெல்லாம் கண்முன் கொண்டு வருகிறார் நூலாசிரியர்.

மொத்தம் 57 தலைப்புகளில் இலக்கியத் தேன்துளிகளை இனிக்க இனிக்கத் தருகின்றார் நூலாசிரியர். படித்துச் சுவைக்கலாம்.

**–பொ.மறைமலை.**

## சிந்திக்க வைக்கும் அறிவியல்

ஆசிரியர்: வே. தமையந்திரன்

வெளியீடு: மருதம் பதிப்பகம்
59, ஆடம் தெரு,
சென்னை-4

விலை: ரூ.27 பக்: 168

அறிவியல் தமிழை வளர்க்க முடியுமா?

முடியும். தமிழால் முடியாதது எதுவும் இல்லை என்று அறிஞர் பெருமக்கள் அறுதியிட்டுக் கூறி வருகின்றனர். அத்துடன் அவை தொடர்பான நூல்களும் பெருமளவில் வெளிவந்து கொண்டிருப்பது, தமிழ் வளர்ச்சிக்கு நல்ல அறிகுறி. அந்த வகையில், இந்த நூலில் பல அறிவியல் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

விண்மீன்கள், மின்சாரம், நுண்ணோக்கி, கதிரியக்கம், பறக்கும் தட்டு, செயற்கைச் சிறுநீரகம் மற்றும் நுரையீரல்கள்– இப்படி 18 கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. மாணவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் படித்து அறிவியல் தமிழை அறிந்து கொள்ளலாம்.

**–பி.வி.கிரி.**

# நூல் நயம்

## தேவர் திருமகன்

ஆசிரியர்: பி.எல்.ராஜேந்திரன்

வெளியீடு: பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக் குளம்
மேற்கு வீதி,
மயிலாப்பூர்,
சென்னை-4

விலை: ரூ.22 பக்: 141

'தென்னாட்டு நேதாஜி', என்று போற்றிப் புகழப்படும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் வாழ்க்கை வரலாற்றைப் படம் பிடித்துக்காட்டும் வகையில் இந் நூல் பாங்குற அமைந்துள்ளது.

தெய்வ பக்தியும் தேசபக்தியும் மிக்க பசும்பொன்னாரின் பிறப்பு, வளர்ப்பு, தொண்டுகள் எல்லாம் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அத்துடன் அன்னாரின் அருமை பெருமைகளையெல்லாம் அவரை அறிந்தவர்கள் புகழ் மாலை சூட்டியுள்ளார்கள்.

சென்னையில் தேவருக்குச் சிலை எழுப்பி சிலையைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை முதலான முழுத் தகவல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

**–பொ.மறைமலை**

## பரந்தாமனார் கவிதைகள்

தொகுப்பாசிரியர்
அ.ப. சோமசுந்தரன்

வெளியீடு: அல்லி நிலையம்
19, முத்து முதலித் தெரு
சென்னை 600 007

விலை: ரூ.75 பக்: 464

அ.கி. பரந்தாமனார் இயற்றிய அருந்தமிழ்க் கவிதைகளின் தொகுப்பே இந்நூல். அவரது எண்ணத்திலே முகிழ்த்த வண்ணத் தமிழ்க் கவிதைகளைப் படிக்குந்தோறும் இன்பம் பயக்கின்றன– இனிய வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் விளங்குகின்றன.

தொடக்கத்தில் தன் கவிதை பிறந்த கதையைக் கூறும் கவிஞர், இயற்கை இன்பத்திலே திளைக்கின்றார். பிறகு காதல் நிலைக் கவிதைகளைத் தந்து, பைந்தமிழ் மகட்குப் பாமாலை சூட்டி மகிழ்கின்றார்.

வாழ்க்கைப் பாடல்களும், உதிர்ந்த மலர்களும் நம் உள்ளத்தைத் தொடுவன. இதேபோல குழந்தை இலக்கியப் பாடல்கள் குழந்தைகளை மட்டுமல்ல, பெரியவர்களையும் குதூகலிக்கச் செய்யும்.

கவிதைகளிலே வாழ்க்கை நெறிகள், முறைகள் எல்லாம் இழைந்திருக்கின்றன. கவிதை வரிகள் வைர வரிகளாய் மின்னித் தெறிக்கின்றன. எல்லாத் திறத்தாரும் படித்து மகிழத்தக்க பைந்தமிழ்ச் சோலை இது.

**- பொ. மறைமலை**

## மனோரமா இயர்புக்-1995

வெளியீடு: மலையாள மனோரமா,
கோட்டயம்,
கேரளம்-686 001

விலை: ரூ.35 பக்: 720

பொது அறிவுத் தகவல்கள் நிறைந்த புதுமைத் தொகுப்பு இது.

உலக நாடுகள் குறித்த தகவல்கள், இந்திய மாநிலங்கள் பற்றிய புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குறித்த கண்ணோட்டம் நாம் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள தொகுப்புகளாக விளங்குகின்றன. இவையின்றி, பொதுப்படையான தகவல்கள் உலக அதிசயங்கள், சாதனைகள், பரிசுகள் - விருதுகள் முதலான குறிப்புகளும், அறிவியல் தொடர் பான செய்திகளும் மாணவர்க்கு மட்டுமல்ல, பெரியவர்க்கும் பயன் படுவன.

தமிழகத்தில் வளர்ந்து வரும் பெருநகரங்கள், தமிழகப் பொருளா தார நிலை, தபால் தலையில் தமிழகம், தற்காலத் தமிழ் இலக் கியத்தின் போக்கு ஆகிய கட்டு ரைகள் சிந்தைக்கு விருந்தூட்டு வதாகும். உலகப் படங்கள், கண்டு பிடிப்புகள், விண்வெளி ஆராய்ச்சி, தகவல் தொடர்பு, உணவும் ஊட்டச் சத்தும், கம்ப்யூட்டர், கண்டங்கள், உலக மொழிகள், இந்திய அரசிய லமைப்பு, பத்திரிகைகள், தொலைக் காட்சி, சுற்றுலா, தமிழக வரலாறு முதலான ஏராளமான கட்டுரைகள், தகவல்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

தஞ்சையில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாடு குறித்த கட்டுரையும் இடம் பெற் றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் ஒரு பொது அறிவுத் தகவல் களஞ்சியம் என்றால் அது மிகையல்ல.

**—பி.வி.கிரி.**

**எழுத்தாளன் ஆவதற்குச் சாமர்த்தியம் மட்டுமிருந்தால் போதாது, சரக்கும் இருக்க வேண்டும்.**

**—எமர்சன்**

**எழுத்தாளனின் தொழில் மிகவும் மேன்மையானது.**

**—பிரண்டீஸ்**

**ஆபாசமான செய்திகளை வைத்து எழுதாமலிருப்பதே, ஓர் எழுத்தாளனுக்குரிய கற்பாகும்.**

**—மாண்டேன்**

## வளம் தரும் மரங்கள் (இரண்டாம் பாகம்)

ஆசிரியர்: பி.எஸ்.மணி

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
*41* பி, சிட்கோ
எஸ்டேட், சென்னை-*98*

விலை: ரூ.*32* பக்: *263*

ஒரு நாட்டுக்கு வளத்தையும், வனப்பையும் தருவது மரங்களாகும். மரம் இன்றேல் மழை இல்லை, மழை இன்றேல் வாழ்க்கையும் இல்லை. உயிர் வாழ்வதற்கு அடிப் படையாக விளங்கும் மரங்களை வளர்ப்பது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம் என்கிற உறுதியோடு நாம் செயல்பட்டால் அது இன்றைய சமுதாயத்துக்கு மட்டுமல்ல, நாளைய சமுதாயத்துக்கும் பல னைத் தரும் என்பது உண்மை யாகும். அந்த வகையில் இந்த நூல் பல்வேறு மரங்களை வளர்ப்ப தற்கான உத்திகளைக் கூறுகின்றது. எந்தெந்த மரங்களை எங்கெங்கே, எப்படி வளர்க்கலாம் என்கிற பயிர் முறையும் விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் மரத்தின் மருத்துவப் பயன்களும் கூறப்பட்டுள்ளன.

**—பி.வி.ஜி.**

## விஞ்ஞான ரீதியில் கோழிப் பண்ணை அமைத்தல்

ஆசிரியர்: டாக்டர் எப்.ஆர். ஷெரிப்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
*41* பி, சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை *600 098*

பக்கம்: *248* விலை ரூ.*35*

நாளுக்கு நாள் பல அரிய அறிவியல் கண்டுபிடிப்புகள் பெருகிவரும் இந்நாளில், இது நாள் வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள கோழியின அறிவியல் பூர்வமான முறைகளுடன் கோழிப் பண்ணைப் பராமரிப்பு, வீரிய இனக் குஞ்சுகள், தீவனம், நோய் அறிகுறிகள், தடுப்பு முறைகள், சிகிச்சை முறைகள் அதற்கான மருந்துகள், அவை கிடைக்கும் இடங்கள் ஆகிய முழு விவரங்கள் தரப்பட்டுள்ளன. அத்துடன், இளைஞர்கள் சுய வேலைவாய்ப்புப் பெறவும், வங்கிக் கடனுதவி பெறவும் வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. கோழிப் பண்ணை தொடங்க இருப்பவர் களுக்கும், கோழிப் பண்ணை நடத்தி வருபவர்களுக்கும் ஒரு வழிகாட்டி யாக அமையும் என்பதில் ஐய மில்லை.

**—கு. மல்லிகா**

# பாரதி! நீ ஒரு ஞானத்தீ!

## கவிஞர் மு.மேத்தா

தாயே, தமிழே, தஞ்சைக்கு ஏன் நீ வந்தாய்?
இந்த நெருக்கடியில் எதற்காக நீ வந்தாய்?
தென்பொதிகைக் காற்றுத் தேரேறி பவனி வரும்
ஆனிமுத்துப் பொன்மேனி அன்னைக்கு
வேர்க்காதா?
இந்த நெருக்கடியில் எதற்காக நீ வந்தாய்?
தாயே, தமிழே தஞ்சைக்கு ஏன் நீ வந்தாய்,
ஓ, அழைப்பு விடுத்த அன்னையே நீதானோ?
கடலையே வரவழைத்த கட்டளையே உன்
குரல்தானோ?
பூமிப் பரப்பெங்குமிருந்து பறந்து வந்த
தமிழ்த்தாயின் புதல்வர்கள் இவர்களெல்லாம்.
நீங்களோ முதல்வர்!

உங்களைக் கவியரங்கத் தலைவர் காற்று என்றார்.
அப்புறம், புயல் என்றார். ஆம்.
காத்திருக்கும் வரைக்கும் உங்கள் பெயர் காற்றாக
இருக்கிறது.
புறப்பட்ட பின்னால்தான் அது புயல் என்று
தெரிகிறது.

தலைவருக்கு வணக்கம்,
ஓசைக் கவி படைக்க ஒன்றிவந்த பறவைகளே,
நேசக் கவிஞர்களே, நெஞ்சத்தின் நண்பர்களே,
பாசமிகு மானுடத்தின் பாடகன் நான்,
வணங்குகிறேன்.
இங்கே மாநகர வீதிகளில், மனித நதிகள்
எல்லாம் காவிரிக் கரை வந்து கடலாகிப்
போனதுவோ?
அலைகளோ, அலைகள் என்றால் அசையுமே,
ஓ! இவைதாம் தலைகளோ, இவர்தம் உள்ளங்கள்
தமிழ்த்தாய் உணவருந்தும் இலைகளோ!
பாரதியே நான் உனக்கு
ஆவாரம் பூ எடுத்து அழகான செந்தமிழில்
தேவாரம் பாடவா?
திருப்பாவை சொல்லவா?
கையில் குறள் எடுத்து காலில் சிலம்பு அணிந்து
கம்பனிடம் வார்த்தைகளைக் கடன் வாங்கிச்
சூடவா?
ஒருவாசகத்தில் உயிரை உருகவைக்கும்
திருவாசக அமுதம் தெளிக்கவா?
மாறாப்புகழுடைய மாணவியைப் போற்றிவரும்
சீறா தனைப் புகழ்ந்து செப்பவா?
பூம்பாதத் தாமரையாய் குளிரவைக்கும்
ஏசுபிரான்தேம்பாவணிதனைத் தேர்ந்து மனம்
ஒப்பவா?
பாரதியே, நான் உனக்கு
ஆவாரம் பூ எடுத்து அழகான செந்தமிழில்
தேவாரம் பாடிடவா?



# நேசமணி நூற்றாண்டு விழாவை அரசு நடத்தும்!

-மாண்புமிகு முதல்வர் ஆணை

குமரித் தந்தை என்றும், மார்ஷல் நேசமணி என்றும் கன்னியாகுமரி பகுதி மக்களால் போற்றிப் பாராட்டப்படும் திரு ஏ.நேசமணி அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை, அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

திரு ஏ. நேசமணி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பிற்பட்ட மக்களுக்குச் சமூகநீதி கிடைப்பதற் காகப் பாடுபட்டவர் என்பதைக் கருத்தில் கொண்டும், அவர் தமிழகத்திற்கு ஆற்றிய சேவையை.க் கருத்தில் கொண்டும், அவரது பெயருக்கு மேலும் புகழ் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த ஆணையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்துள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி திரு நேசமணி அவர்களின் நூற்றாண்டுப் பிறந்த நாள் விழாவும், அவரது வாழ்க்கையைச் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சியும், மாநில அரசின் சார்பில், கன்னியாகுமரி மாவட்டம் தக்களையில் நடத்தப்படும்.

திரு நேசமணி அவர்களின் பெயரையும், புகழையும் பரப்பும் வண்ணம், தமிழக அரசு ஏற்கெனவே திரு நேசமணி அவர்களின் பெயரில் போக்குவரத்துக் கழகம் ஒன்றை இயக்கி வருகிறது.

மூத்ததமிழர் உயிர் காத்ததற்காய் தேவாரம்
பாடிடவா?
முத்தமிழ் உயிர் காத்ததற்காய் தேவாரம்
பாடிட வா.
புதிர் அடிப்படையாய் இருந்த புதையல்களை
மீட்டு வந்த
அதிரடிப்படையாய் புதிரடிப்படையாய்
ஆர்த்தெழுந்து
தேடிடவா? ஆராரோ, ஆரிரரோ, ஆராரோ நான்
யாரோ? ஆரிரரோ ஆராரோ அவர் குறியில்
இன்னும் யார் யாரோ?
யாரப்பா, இங்கே அணிவகுத்த தமிழ்த்தலையைப்
பாரப்பா,
இங்கே அணிவகுத்த தமிழ்ப்படையைப் பாரப்பா,
பத்துப்பன்னிரெண்டு தென்னைமரம் கேட்டவன்
யார் கூறப்பா,
பாட்டுக்கொரு புலவன் பாரதி அவன் பேர்
கூறப்பா,
இரவில் சரண் புகுந்து நீயும் வந்து சேரப்பா,
நல்வழியைத் தேடப்பா, வீரப்பா!
வீரப்பா, பாரதிக்கும் உனக்கும் உள்ள
வித்தியாசத்தைப் பார்த்தாயா?
அவன் உன்னைப்போல சந்தன மரம்
கேட்கவில்லை.
தென்னைமரம் கேட்டான். அதுவும்
பத்துப் பனிரண்டு தென்னை மரம் கேட்டான்.
ஆனால், நீயோ அநியாயமாக ஆயிரம் கோடி
கேட்டாய்.
இட ஒதுக்கீட்டிற்காக,
எண்ணத்தில் இடம் ஒதுக்கியவர்கள் பலபேர்.
இட ஒதுக்கீட்டிற்காக
இதயத்திலும் இடம் ஒதுக்கியவர்கள் இவர்கள்தான்.
சாதனையின் சரித்திரத் தாய்!
இனி வீரப்பா, உனக்கு ஒரு இட ஒதுக்கீடு

செய்யத் தயாராய் இல்லை!
இங்கே மேலாண்மை காட்டி விஜயாலய சோழன்,
வேளாண்மை காட்டி வளர்த்த நகர் தஞ்சை!
வேளாண்மை அமைச்சர் தொடங்கிவைத்தார்.
அவருடைய நூலாண்மையை, ஏற்கெனவே
நான் அறிவேன்!
இப்போதுதான் அவர் எழுதி வந்த
தாளாண்மையை அறிந்தேன். வாழ்த்துகிறேன்.
வாடகை வண்டியிலே வந்தாலும் தமிழை
வாடகைக்கு விடாதவர்கள் நாங்கள் என்றீர்.
ஏனென்றால், நீங்கள் எல்லாம்
வாட கைவிடாத ஆட்கள் அன்றோ!
கவிஞன் ஒரு ரோஜாச் செடி. இந்த உலகம்
மலர்களைப் பறித்துக்கொண்டு முட்களை
அவன் நெஞ்சிலேயே குத்துகிறது.
கவிஞன் ஒரு காகிதம்.
இந்த உலகம் படித்து முடித்த பிறகு
கவனமாக அவனைக் கிழித்து விடுகிறது.
பாரதியே!
புதிய சிந்தனை புதிய கற்பனை பூத்திடும்
பூந்தோட்டம்,
உன் வாசலைத் தேடி வாசனை தேடி வருவேன்
வண்டாட்டம்.
நீதான் எங்கள் தமிழின் கொண்டாட்டம்.
தென்றல் மலர்களுக்குத் தலைசீவி விடுகிறது.
புயலோ மலர்களின் தலைகளையே சீவிவிடுகிறது!
ஒரு கவிஞனுக்குப் பாராட்டு நடந்தால்
வாழ்க்கை தேரோட்டமாகிறது.
கண்ணில் நீரோட்டம் நடந்தால்
வாழ்க்கை போராட்டமாகிறது.
கூட்டுக்குள் பாடாத குயில், பாரதி.
அவனின் கோட்டுக்கும் பாட்டு வரும்.
குலுங்கி இசை போட்டு வரும்.
பாட்டுக்குள் பாட்டு நீ,
நீ பட்ட பாட்டை உரைத்தால்
இப்பாட்டரங்கம் போதாது!
பாரதி, பாட்டுக்கு நட்சத்திரப் பந்தல் விரித்தான்.
தன் வீட்டுக்கு நைந்ததொரு கந்தல் விரித்தான்.
வெள்ளையனின் துப்பாக்கி, வெறிபிடித்த
பீரங்கிச் சேனையை எதிர்த்துச்
சிறகடித்த கவிஞரை ஒரு யானையா கொன்றது?
அவையோரே சிந்திப்பீர்!
ஒரு பானைதான் அவனைப் பழிவாங்கிக்
கொன்றது!

**நாடு வாழ நம்முடைய உழைப்பும் தேவை என்ற உணர்வு எல்லோருக்கும் வேண்டும். நாம் யாவரும் நமது அறிவாற்றலை நாட்டுக்கு எந்த அளவு தருகின்றோமோ, அந்த அளவுக்கே நாட்டுப் பொது நன்மை உயரமுடியும் !**

**—பேரறிஞர் அண்ணா**

அரிசியைக் காணாமல் அண்ணாந்து பார்த்திருந்த
வெற்றுச் சோற்றுப் பானைதான்
அவனைப் பழிவாங்கிக் கொன்றது.
வறுமையன்றோ அவனது திறமையைத் தின்றது.
பூமிக்கு நாணம் வந்தது.
ரோஜாக்கள் பூத்தன.
ரோஜாவுக்குக் கோபம் வந்தது.
முட்கள் முளைத்தன. முட்களுக்கு யோகம் வந்தது.
ஏசுவின் தலையின் கிரீடமானது,
பாரதியே,
உன்னோடு சேர்ந்து வாழ்ந்த காரணத்தால்
வறுமையும் கூட பெருமை பெற்றது!
பாரதி, துட்டுக்கு நீ ஆசைப்பட்டிருந்தால்
எட்டயபுரத்துப் பணப்பெட்டிகள் உன்னையே
வட்டிக்கு விட்டிருக்கும்.
நீ சிலப்பதிகாரம். சிலம்பை உடைக்கவில்லை.
பழைய சிந்தனைகளை உடைத்தாய்.
நீ அட்சயபாத்திரத்தை ஏந்தவில்லை. நீ
மணிமேகலை!
அட்சர லட்சங்கள் பெறும்
பாத்திரங்களைப் படைத்து வார்த்தாய்.
பாரதியே நீ ஒரு முகில்.
மழையைத் தமிழுக்கு வழங்குவதற்காக
மேகமாய் எங்கெங்கோ மிதந்து திரிந்தவன்.
நீ ஒரு நதி.
பாதம் பட்ட இடமெல்லாம்
தமிழைப் பயிரிட்டவன்.
நீ ஒரு கடல், உன்னையே விழுங்கிக் கொண்டவன்,
நீ ஒரு காற்று, உன்னையே துரத்திக் கொண்டவன்,
நீ ஒரு வானம், நீ அணிந்திருந்த கந்தல்
துணிக்குள்ளே
நட்சத்திரங்களையெல்லாம் கட்டி வைத்திருந்தவன்.
தீபமாய் எரிந்த திரி நீ!
நாங்கள் உன்னைக் கையில் வைத்து
கரிக்கோடு போடுகிறோம்!
பாரதியே நீ ஒரு ஞானத் தீ.
உன்னுடைய நெருப்பில் நீயே எரிந்தாய்.

விழுந்தது சாம்பல் அல்ல. சந்தனத் தமிழ்,
நீ நெருப்பு. எனக்கிருக்கும் ஒரே ஆச்சரியம்,
எழுதுகிறபோது, நீ எழுதுகிற தாள் எப்படி
எரியாமல் இருந்தது?
இன்றைய தமிழ்நாடு எப்படியிருக்கிறது?
அன்று, முல்லைக்கொடிக்குப்
பாரி தேர்கொடுத்தான்!
இன்றைய மாமனார்களோ, முல்லைக்
கொடியையும் கொடுத்து
தேருக்குப் பதிலாகக் காரையும் கொடுக்கிறார்கள்.
மயிலுக்குப் போர்வை தந்த பேகனே,
எங்கு போய்த் தொலைந்தாய்? வா,
இலட்சோப இலட்சம் பச்சை மயில்கள்,
வறுமை, அடிமை, வரதட்சணைக் கொடுமை
இவற்றில் வாடுகின்றன, என்றேன்.
அவசரஅவசரமாக வந்த பேகன், வேகவேகமாய்ப்
போர்வையை எடுத்து
தன் முகத்தைப் போர்த்திக்கொண்டான்.
தலைகொடுத்தான் அன்று குமணன் தமிழுக்கு,
ஆனால் இன்று, இந்த நாட்டில் சிலர்
தமிழை விற்பதற்குத் தயங்கவே மாட்டார்கள்.
சிலர் தாமதிப்பது கூட தயக்கத்தால், அல்ல,
நல்ல விலை கிடைக்காதா
என்ற நப்பாசையாலேதான்!
தமிழ் என்ற தங்கச்சப்பு
எப்போதும் உள்ளது எங்கள் கைகளில்.
என்ன செய்வது,
நாங்கள்தான் ஒருவரையொருவர்
மொட்டையடிக்கிற
முயற்சியிலேயே உள்ளோமே?
'மாகாளி பராசக்தி கடைக்கண் வைத்தாள்
–ஆகா என்று எழுந்தது பார் யுகப்புரட்சி'
என்றான் பாரதி.
பாரதி, தேவி கடைக்கண் வைத்தாள்
ரஷ்யா பிறந்தது.
எந்த மூதேவி கடைக்கண் வைத்தாள்,
ரஷ்யா உடைந்தது?
ஸ்டாலின் காலத்தில்
ரஷ்யா பதிவு செய்யப்பட்ட தபாலாக இருந்தது.
உள்ளே இருப்பதென்ன, ஒருவருக்கும் தெரியாது.
குருஷ்சேவின் காலத்தில், அது
உள்நாட்டு அஞ்சல் உறையாகிப் போனது.
திரைகளை எட்டிப் பார்க்க முடிந்தது.
அப்படி இப்படிப் பார்த்து
ஒரு நாலு வரிகளைப் படிக்கலாம்.



அச்சம் தவிர்ந்தது வாழ்வு-நல்
லன்பின் விளைவது வாழ்வு
மச்சினில் வாழ்பவ ரேனும்-அவர்
மானத்தில் வாழ்வது வாழ்வு!
உச்சி மலைவிளக் காகு-உல
கோங்கும் புகழ்கொண்ட தான
பச்சைப் பசுந்தமிழ் நாட்டில்-தமிழ்
பாய்ந்திட வாழ்வது வாழ்வு!

–பாவேந்தர் பாரதிதாசன்.

கோர்ப்பசேவின் காலத்திலோ
ரஷ்யா அஞ்சலட்டை போல ஆகிவிட்டது!
எவர் வேண்டுமானாலும் எடுத்துப் படிக்கலாம்.
தபால்காரர் கூட படித்துவிட்டுக் கொடுக்கலாம்!
ஆனால், அதை அடிக்கடி வெள்ளை
மாளிகைதான்
விரும்பிப் படிக்கிறதா?
வேலை செய்பவர்களுக்கு
இங்கே கூலி கிடைப்பதில்லை.
வேலை செய்வது போல் நடிப்பவர்களுக்கு
இங்கே விருது கிடைக்கிறது.
பாரதிக்கு நிலாச்சோறு உண்ண நீண்ட நாள்
ஆசை.
அபூர்வமாய்க் கிடைத்தது சோறு.
அப்போதெல்லாம் அமாவாசை.
இந்த உலகில் சட்டை மாற்றாமல்
சாஸ்வதமாய் இருப்பது
சிற்பிகள் வடித்த சிலைகள் மட்டுமே.
பாரதியோ தமிழைப் பற்றிய இலட்சத்தில்
தடுமாறாமல் இருந்தான்.
பாரதி ஒரு புத்தகம்.
ஆனால், எதுவும் எழுதாத
வெள்ளைத் தாள்களுக்குத்தானே இங்கே

# தெற்காசிய நாடுகளுக்கு இடையேயான 7-வது விளையாட்டுப் போட்டிகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆலோசனையின் பேரில், தெற்காசிய நாடுகளுக்கு இடையேயான 7-வது SAF விளையாட்டுப் போட்டிகள் இவ்வாண்டு டிசம்பர் மாத இறுதியில் தமிழகத்தில் சென்னையில் நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் ஏற்கெனவே தமிழக அரசு செய்துவருகிறது. ரூ.120 கோடி மதிப்பில் நடத்தப்படும் இந்தப் பெருமைமிகு விளையாட்டுப் போட்டிகள் நடப்பாண்டு 1995 டிசம்பர் மாதம் 18.12.1995 முதல் 27.12.1995 வரை 10 நாட்களுக்குச் சென்னையில் நடைபெற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.


இந்த விளையாட்டுகள் மிகச் சீரிய முறையில் நடைபெறுவதற்காக, சென்னை நகரில் புதிய விளையாட்டு அரங்கங்களும், ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வருகிற பல்வேறு விளையாட்டு அரங்கங்களைப் புதுப்பிக்கும் பணியும், மேலும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ள வருகின்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் நடுவர்கள் தங்குவதற்காகச் சென்னை அருகே கோயம்பேட்டில் SAF விளையாட்டுக் கிராமம் அமைக்கும் பணியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் வெகு விரைவாக நடைபெற்று வருகின்றன.


பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு போட்டிகளுக்குத் தயாராக ஓரிரு மாதங்களுக்கு முன்னரே வைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

---

விலை அதிகம்!
பழைய புத்தகக்கடை பாரெங்கும் உண்டே.
வெள்ளைத் தாள்களை அப்படி விற்கிறார்களா?
ராக்கெட் சோதனையில் இந்தியா
வெற்றி பெற்றது.
மகிழ்ச்சிதான்.

இப்போது ராக்கெட்டுக்கே
சோதனை வந்துவிட்டதே.
வெளிநாட்டுக்குப் போய்விட்டதாம் ரகசியங்கள்.
வேலிகள் பயிரை மேய்ந்தால்,
ஆடுமாடுகளுக்கு அதிருஷ்டமல்லாவா?
பாரதியே, உன் பெருமை பாரறிய வேண்டாமா?
உன்னைப்
பாவேந்தர் சொற்களினாலேயே பாராட்டுகிறேன்.
நீ குடிசைவாசிகளின் குடும்ப விளக்கு.
நீ அடக்க முடியாத அழகின் சிரிப்பு.
தகர்க்க முடியாத தமிழச்சியின் கத்தி.
நீ எங்களுக்குக் கிடைத்த எதிர்பாராத முத்தம்.
இறுதியாக முதல்வரிடம் கவிதை மனுப்போட்டு,
என் கடமையினை முடிக்கின்றேன்!
எல்லாரும் கோவிலுக்குச் சென்று
தம் குறை சொல்வார்கள்.
எவரேனும் கோவிலின் குறை தீர்க்க
நினைத்ததுண்டா?
இவ்வுலகில் கோவிலுக்குச் சென்று
குறை சொல்வார் எவரேனும்
கோவிலின் குறை தீர்க்க நினைத்ததுண்டா?
நலிந்த மனிதர்க்கே உதவுவார் நாட்டில் இல்லை.
நலிந்த கோவில்களின்
நலன் பெருக்க நினைப்பவர் யார்?
நினைத்தார் நம் முதல்வர்!
ஆலயப் பணிக்காக ஆயிரம் பணி செய்தார்.
முதல்வர் அவர்களே,
'தமிழை ஆட்சி மொழியாக்கி
அகம் மகிழ வேண்டுகிறேன்.
சாட்சி மொழியாகத் தவிக்கின்ற தமிழை
ஆட்சி மொழியாக்கி அகம் மகிழ
வேண்டுகின்றேன்.
கல்வியில், அரசாங்கக் கட்டளையில்,
நீதி மன்றத்தில், எல்லா இடங்களிலும்
தமிழுக்கு ஏற்றம் தர
வேண்டுகிறேன்,
வணக்கம். நன்றி.





## திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்

# காயிதே மில்லத் நூற்றாண்டு விழா

**கா**யிதே மில்லத் இஸ்மாயில்சாகிப்பின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா, அரசு சார்பில் 18.7.95 அன்று திருநெல்வேலிகட்டபொம்மன் மாவட்டத்தைச் சேர்ந்த மேலப் பாளையத்தில் உள்ள பஜார் திடலில் நடைபெற்றது.

விழாவுக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் காயிதே மில்லத் படத்தைத் திறந்து வைத்தார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் விழாத் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஜெயக்கொடி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசி னார். புலவர் காஜாமொய்தீன் கவிதை பாடினார்.

விழாவில், சட்டமன்ற உறுப் பினர் நெல்லை திரு வேலையா பேசும்போது, "காயிதே மில்லத் வாழ்ந்த பேட்டை வீட்டை அரசு ஏற்று நினைவுச் சின்னமாக அதைப் பாதுகாக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

பாளையங்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் திரு தர்ம லிங்கம் பேசும்போது, "நெல்லை சந்திப்பில் காயிதே மில்லத் திருவுருவச் சிலை அமைக்க வேண்டும்" என்றார்.

விழாவில் மாண்புமிகு திரு நாகூர் மீரான் அவர்கள் பேசும்போது கூறியதாவது: "வாழ்ந்து மறைந்த தலைவர் களின் வரலாற்றை இளை ஞர்கள்—எதிர்காலச் சந்ததியினர் அறிந்து, அதற்கேற்ப நடக்க இந்த விழாவைப் புரட்சித்தலைவி அவர்கள் தமிழகம் முழுவதும் நடக்க உத்தரவிட்டு உள்ளார்.

"எத்தனையோ முதலமைச் சர்கள் இந்த நாட்டை ஆண் டார்கள். ஆனால், கண்ணியத் துக்குரிய காயிதே மில்லத்துக்குப்

பெருமை சேர்த்தவர் புரட்சித் தலைவிதான்.

இந்த இஸ்லாமிய சமுதாயத் திற்குக் காவலன், பாதுகாப் பாளன் என்று முதலைக் கண்ணீர் வடித்தவர்கள்கூட 'வக்ப்' வாரியத்திற்கு ரூ.2 இலட்சம் கேட்டபோது நிதி இல்லை என்று சொல்லி விட்டனர். ஆனால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தான் இந்தச் சமுதாயத்திற்காக ரூ.1 கோடியே 65 இலட்சம் கொடுத்தார்.

"உலமாக்களுக்கு ஒய்வூதியத் திட்டம் கொண்டு வந்து ரூ.250 வழங்கினார். புரட்சித்தலைவி அவர்கள் ரூ.250 பென்சன் தொகையை ரூ.400 ஆக உயர்த்தி உத்தரவிட்டுள்ளார். 1,700 உலமாக்கள் இதன்மூலம் பயன் பெறுகின்றனர். அதை இந்தச் சமுதாயம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் எல்லாம் டாக்டர் புரட்சித்தலைவிக்கு நன்றியோடு இருக்கவேண்டும்.

"வக்ப் வாரிய அலுவலகம் சென்னையில் கட்ட நம் புரட்சித் தலைவி அவர்கள் ரூ.5 இலட்சம் வழங்கியுள்ளார்.

"பாளையங்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் திரு தர்மலிங்கம் அன்பின் காரண மாக இங்கே பேசும்போது, காயிதே மில்ல்த்துக்குச் சிலை அமைக்க வேண்டும் என்று கூறினார். இஸ்லாமிய வழக்கப் படி தலைவர்களுக்குச் சிலை வைப்பதில்லை. ஆதலால் காயிதே மில்லத்திற்கு மணி மண்டபம் கட்ட புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

★ மனிதன் கீழ்மை நிலையிலிருந்து மேம்பாடு அடைய வேண்டுமானால், தன்னம்பிக்கை உடையவனாகவும், தனது சக்தி என்ன என்பதை உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும்.
- தந்தை பெரியார்

"இந்தச் சமுதாயத்திற்கு வாரி வழங்கிய புரட்சித்தலைவர் அவர்களின் வாரிசாக விளங் கும் புரட்சித்தலைவி அவர் களுக்கு, இந்தச் சமுதாயத்தின் ஒட்டுமொத்த ஆதரவைத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்".

விழாவில் இந்திய யூனியன் முஸ்லிம்லீக் தமிழ் மாநிலத் தலைவர் திரு. அ.க.அ. அப்துல் சமது அவர்கள் பேசியதாவது:

"காயிதே மில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவைத் தமிழகத் தில் மாதம் ஒரு நகரில் அரசு விழா எடுக்கும் என்று நினைத்தோம். ஆனால், 15 நாட்களுக்கு ஒரு ஊரில் இந்த விழா இந்த ஆண்டு முழுவதும் கொண்டாடப் புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

"கேரளாவில் நடக்கும் ஆட்சி யில் முஸ்லிம்லீக் பங்கேற்கிறது. ஆனால், அங்குகூட இப்படி காயிதே மில்லத்திற்குச் சிறப் பான விழா எடுக்கப்படவில்லை. தமிழகத்தில் இப்படிப்பட்ட விழா எடுத்ததற்குப் புரட்சித் தலைவிக்கு இந்தச் சமுதாயம் சார்பில் நன்றியைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

இந்த ஆட்சிக்கு உறுதியாக இருப்போம். இந்தச் சமுதாயமும் உறுதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழுக்குப் பாடுபட்டவர் காயிதே மில்லத். புரட்சித் தலைவர் அவர்கள் காயிதே மில்லத் படத்தைச் சட்டமன்றத் தில் திறந்தார். காயிதே மில்லத் மாவட்டம் தஞ்சை மாவட்டத்தில் பிரித்து வைக்கப்படும் என்று அறிவித்தார். அரசு விழாவாகக் காயிதே மில்லத் விழாவைக் கொண்டாடினார் இவர்."

விழாவில் மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் ரூ.10 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசும்போது கூறியதாவது:

"நம் புரட்சித்தலைவி அவர்கள் அரசியல் ஆதாயம் தேட இப்படிப்பட்ட விழாக் களை நடத்தவில்லை. ஏழை எளிய மக்களுக்காக அடித்தள மக்களைக் காப்பதற்காகப் பாடு படும் அரசாக இந்த அரசு உள்ளது.

"யார் யார் இந்த நாட்டுக்காக, சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட னரோ அந்தத் தலைவர்களைப் பெருமைப்படுத்த நம் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்.

"அந்த வகையில் கண்ணியத் திற்குரிய காயிதே மில்லத் விழாவை மாநிலம் முழுவதும் கொண்டாடமாண்புமிகுபுரட்சித் தலைவி அவர்கள் உத்தர விட்டுள்ளார். அதன் பேரில்

# வாய்மையும் தூய்மையும்

காயிதே மில்லத் இசுமாயில் சாகிப் அவர்கள், இசுலாமியச் சமுதாயம் நெடுங் காலத்திற்குப் பிறகு பெற்ற பெரும் பரிசு ஆவார்.

சனநாயகத்திற்குக் கிடைத்த அறப்போர் வாளாக அவர் இருந்து வந்திருக்கிறார்.

தொடர்ந்து அப்படி இருந்து வருவார் என்கிற நம்பிக்கையில் நாங்கள் நல்லாட்சி நடத்தத் துணிந்திருக்கிறோம்.

கண்ணியத்துக்கு உரிய காயிதே மில்லத் அவர்கள் முசுலீம் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர் மட்டும் அல்லர். தமிழர் சமுதாயத் தின் தன்னேரில்லாத் தலைவரும் கூட!

நம் நாட்டின் முதுபெரும் அரசியல் மேதையான அவருடைய வாய்மையும், தூய்மையும் அனைவராலும் பாராட்டப் பெற்றவை.

—பேரறிஞர் அண்ணா

---

இங்கு விழா சிறப்பாக நடக் கிறது.

"காயிதே மில்லத் அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே வரலாறு படைத்தவர். ஆதலால் மறைந் தும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். காயிதே மில்லத் என்றால் வழிகாட்டி என்பது பொருள். காயிதே மில்லத் இந்தியத் துணைக் கண்டத்திற்கு வழி காட்டி. தமிழகத்திற்கு வழி காட்டி. அவரது பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாடத் தகுதி உள்ளது.

"காயிதே மில்லத் பெயரில் தனி மாவட்டத்தை உருவாக் கியவர் நம் புரட்சித்தலைவி அவர்கள் ஆவார். காயிதே மில்லத் கனவை நனவாக்கும் தலைவியாக நம் புரட்சித் தலைவி அவர்கள் உள்ளார். ஆதலால், காயிதே மில்லத் எண்ணங்கள் எல்லாம் இந்த ஆட்சியில் நிறைவேற்றப்படும்".

இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் பேசினார்.

தமிழ்நாடு வக்ப் வாரியத் தலைவர் திரு முகமது ஆசிப், எம்.எல்.ஏ.சேப்பாக்கம்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜீனத்சர்புதீன், மற்றும் நெல்லை சிதம்பரனார் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு கே.ஆர்.பி. மணிமொழியன் உள்படப் பலர் பேசினார்கள்.

நெல்லை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு லாரன்சு நன்றி கூறினார்.

முன்னதாக, "நெல்லைச் சீமை வழங்கிய அகில இந்தியத் தலைவர் காயிதே மில்லத்" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது.

இதில், திருவாளர்கள் ஏ.கே. ரிபாயி, பேராசிரியர் கே.எம். காதர் மொகைதீன், எஸ். காதர் மொகைதீன், வி.எஸ்.டி. சம்சுல் ஆலம், எல்.கே.எஸ். மீரான் மொகைதீன், நெல்லை மஜீத் ஆகியோர் பேசினார்கள்.

மேலப்பாளையம் முஸ்லிம் மேல்நிலைப் பள்ளிக்கூடத்தில் காயிதே மில்லத் பற்றிய புகைப்படக் கண்காட்சியும் நடந்தது. இதை மாண்புமிகு அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் நாகூர் மீரான் அவர்கள் திறந்து வைத்தார். விழாவில், சட்டமன்ற உறுப்பினர்கள் தர்மலிங்கம், ஆர்.பி. ஆதித்தன், 'வக்ப்' வாரியத் தலைவர் ஆசிப், முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் சமது, மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெயக்கொடி, முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி தாளாளர் அபுபக்கர், ஆகியோர் கலந்து கொண்டனர். புகைப்படக் கண்காட்சியில் காயிதே மில்லத் பற்றிய 100க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் இடம்பெற்றி ருந்தன. அவற்றை ஏராளமா னோர் கண்டுகளித்தனர்.

# திருநெல்வேலியில் அரசுப் பொருட்காட்சி

நெல்லை டவுன் மாநகராட்சித் திடலில், அரசுப் பொருட்காட்சியின் தொடக்க விழா 5.7.95 அன்று நடந்தது.

இதன் தொடக்க விழாவிற்கு, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் தலைமை தாங்கினார்.

நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வி.கு. ஜெயக்கொடி இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. எஸ். நாகூர்மீரான் அவர்கள் முன்னிலை வகித்தார். மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் திரு. வெ.நடேசன் பால்ராஜ் அவர்கள் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்தார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் திரு.வெ. நடேசன் பால்ராஜ் அவர்கள் பேசும்போது கூறிய தாவது:

"பாளையங்கோட்டைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தர்மலிங்கம், பேசும்போது, நெல்லையப்பர் கோவில், பாளைங்கோட்டை கோபால சாமி கோவில் ஆகியவற்றுக்குக் கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். புரட்சித்தலைவி ஆட்சிக்கு வந்த பின், தெய்வீகப் பணிக்குச் சிறப்பிடம் கொடுத்து இன்று பல கோவில்களில் கும்பாபிஷேகம் நடத்தப் பட்டுள்ளன. திரு. தர்மலிங்கம், அவர்களின் கோரிக்கை நிறை வேற்றப்படும். ஏப்ரல் மாதத் திற்குள், நெல்லையப்பர் கோவிலுக்கும், கோபாலசாமி கோவிலுக்கும் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) நடைபெறும்.

விழாவில், மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் பேசும் போது கூறியதாவது :

"நெல்லையில் இன்று நடைபெறும் பொருட்காட்சி தமிழகத்தின் 83 -வது பொருட் காட்சி ஆகும். இது நெல்லையில் நடைபெறும் 8- வது பொருட்



# தந்தை பெரியாரின் பொன்மொழிகள்



★ மனிதன் நம்பிக்கை வழி நடப்பதை விட்டு, அறிவின் வழிச் சென்று எதையும் சிந்திக்க வேண்டும்.

★ மொழிப்பற்று இராதவரிடத்து நாட்டுப் பற்று இராதென்பது நிச்சயம்.

★ நாடு என்பது மொழியை அடிப்படை யாகக் கொண்டு இயங்குவது.

★ பெண்களுக்குப் பகுத்தறிவும், கல்வியும், உலக நடப்புக் கல்வியும், தாராளமாகக் கொடுத்து மூடநம்பிக்கை, பயம் ஆகியவற்றை ஊட்டக்கூடிய கதை களையோ, சாத்திரங்களையோ, இலக் கியங்களையோ, காணவும், கேட்கவும் சிறிதும் இடமில்லாமல் செய்ய வேண்டும்.

காட்சியாகும். அரசுத் திட்டங்கள், சாதனைகள், செயல்பாடுகள், மக்கள் தெரிந்துகொள்ள, அறிந்து கொள்ள இந்தப் பொருட்காட்சி நடத்தப் படுகிறது.

“இந்தியாவில் எந்த மாநிலத் திலேயும் அரசே நேரிடையாகப் பொருட்காட்சியை நடத்து வதில்லை. ஆனால், புரட்சித் தலைவியின் ஆட்சி நடக்கும் தமிழகத்தில், அரசு சார்பில் பொருட்காட்சி இலாபகரமாக நடந்து வருகிறது. இந்தப் பொருட்காட்சி புரட்சித் தலைவி யின் ஆட்சியின் சாட்சியாகச் சாதனைகளைக் குறிப்பிடும் பொருட்காட்சியாக இருக்கும்.


“இங்கு 17 தமிழக அரசு அரங்குகளும், 3 அரசுச் சார்பு அரங்குகளும் அமைக்கப்படுகின் றன. இந்தப் பொருட்காட்சியில் கிடைக்கும் நிகர வருமானத்தில் 50 சதவீதம் நெல்லை மாநகராட்சிக்கு வழங்கப்படும்”.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் பேசும்போது கூறியதாவது :

''அரசுத் திட்டங்களை விளக்க இப்படிப்பட்ட பொருட் காட்சியை நடத்தி வருகிறோம். இந்தப் பொருட்காட்சிகள் இடை யில் - நடத்தப்படாமல் நிறுத்தப் பட்டன. புரட்சித்தலைவி ஆட்சிக்கு வந்தபின் மீண்டும் இதை நடத்தி வருகிறார்.

“மாவட்ட அளவில் உள்ள கல்லூரி, பள்ளிக்கூட மாண வர்களை அழைத்து வந்து பொருட்காட்சியைப் பார்க்க மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்ய வேண்டும். சென்னையில் 5 இலட்சம் மாணவர்கள் பொருட்காட்சியைப் பார்த்துள் ளனர். பொருட்காட்சியைப் பார்க்க வரும் மாணவ, மாணவி களுக்கு அரசுத் திட்டங்களை விளக்க வேண்டும்.”

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் வே. கோபாலகிருஷ்ணன், ஆர்.பி.ஆதித்தன், ஆர். முருகையா, பாண்டியன், பி. தர்மலிங்கம், தமிழக அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. தி. சண்முக ராஜேஸ்வரன் இ.ஆ.ப. ஆகி யோர் பேசினார்கள். செய்தித் துறை இணை இயக்குநர் திரு பா. ஜெயப்பிரகாசம் அவர்கள் நன்றி கூறினார். விழாவில், கட்ட பொம்மன் போக்குவரத்துக் கழகக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடந்தது.





# காரைக்குடியில் கவியரசர் கண்ணதாசன் 68-வது பிறந்தநாள் விழா

கவியரசர் கண்ணதாசன் அவர்களது 68-வது பிறந்தநாள், மாநில அளவிலான விழா 2.7.95 அன்று காலை 10 மணி முதல் இரவு 10 மணிவரை, தமிழ்நாடு அரசின் சார்பில், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் காரைக்குடியில் உள்ள கவியரசர் கண்ணதாசன் மணிமண்டப வளாகத்தில் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப் பட்டது.

**கலை நிகழ்ச்சியும், கவியரங்கமும்!**

பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கலைநிகழ்ச்சியைப் பொதுமக்கள் மிகவும் ரசித்தனர். மருதுபாண்டியர் போக்குவரத்துக்கழக மேலாண்மை இயக்குநர், திருஆர். முத்துக்குமாரசாமி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

அடுத்து நடந்த கவியரங்கம் நிகழ்ச்சிக்குக் கவிஞர் மீனவன் அவர்கள் தலைமை தாங்கினார். 'குடும்பம்' என்னும் தலைப்பில் கவிஞர் திரு கஸ்தூரிநாதனும், 'வீரம்' என்னும் தலைப்பில் கவிஞர் திரு குறள்பித்தனும், 'பக்தி' என்னும் தலைப்பில் கவிஞர் சங்கரநாராயணனும், 'காதல் என்னும் தலைப்பில் கவிஞர் திரு அப்துல்வாஹித் அவர்களும் கவிதை மழை பொழிந்தனர். காரைக்குடி நகராட்சி ஆணையர் திரு ஆ. பத்மநாபன் அவர்கள் நன்றி கூறினார்.

அன்று மாலை சிங்கம்புனரி தங்கராஜ் குழுவினரின் கிராமியக்கலை நிகழ்ச்சிகள் நடந்தன. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் திரு மோ.பெ. ஜவகர்லால் அவர்கள் தொடக்க உரையாற்ற, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு பாண்டியன் அவர்கள் நன்றி கூறினார்.

**பட்டிமண்டபம்**

பிறகு பட்டிமண்டபம் நடைபெற்றது. மத்திய வங்கியின்

மேலாண்மை இயக்குநர் திரு இராசேந்திரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். கவியரசரின் பாடல்களில் விஞ்சி நிற்பது 'இன்பச்சுவையா? தத்துவநெறியா?' என்னும் தலைப்பில் நடந்த பட்டிமண்டபத்தில், மக்கள் கவிஞர் திரு அருநாகப்பன் அவர்கள் நடுவராக இருந்தார். 'இன்பச்சுவையே!, என்ற தலைப்பில் திரு சாதுசாரங்கபாணி, பேராசிரியர் திருமாவளவன் ஆகியோரும், பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ப. சிவக்குமார், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாத் தொடக்க உரையை, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் நிகழ்த்தினார். காரைக்குடி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திருமதி கற்பகம் இளங்கோ அவர்கள் முன்னிலை உரையாற்றினார். காக மக்கள் ஏற்றுக்கொள்கிற கருத்தை நாட்டு மக்களுக்காகத் தந்தவர். கண்ணதாசன் மெட்டுக்கும் பாட்டு எழுதினார். இவருடைய பாட்டிற்கும் மெட்டுப் போடப்பட்டது. கண்ணதாசனின் காலத்தில் திரைப்படப் பாடல்கள் பல்லக்கில் பவனி வந்தன. இசை ஏவல் செய்தது. பாரதியாரின் பாடல்களில் ஈரஓசை வெளிப்படும். பாரதிதாசனின் பாடலில் இடியோசை முழங்கும். கண்ணதாசனின்



பாடலில் இவை அனைத்தும் வரும்" என்று கூறினார்.

'தத்துவநெறியே' என்ற தலைபபில் திருமதி. நா. சரசுவதி, பேராசிரியர் அழகு பன்னீர் செல்வம், பேராசிரியர் திரு நீலம் மதுமயன் ஆகியோர் வாதிட்டனர். காரைக்குடி வட்டாட்சியர் திரு சர்தார் அவர்கள் நன்றி கூறினார்.

**சிறப்புக் கூட்டம்**

அன்று மாலை சிறப்புக் கூட்டம் தொடங்கியது. பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்...

**கண்ணதாசன் ஒரு கார்த்திகைத் தீபம்!**

மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள், விழாத் தலைமை ஏற்று கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கிப் பேசும்போது, "சிறுகூடல்பட்டியில் பிறந்த மகாகவி கண்ணதாசன் மக்களுக்

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் கவியரசர் கண்ணதாசன் திருவுருவப்படத்தைத் திறந்துவைத்து, ரூ.10 இலட்சம் மதிப்பில் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். அவர் தமது விழாப் பேருரையில், "கவியரசர் கண்ணதாசன் பிறந்த ஊரான சிறு

கூடல்பட்டி என்னுடைய சட்ட மன்றத் தொகுதியான திருப்பத்தூரில் உள்ளது காலத்தால்அழியாத கவிஞன் நிரந்தரக் கவிஞன். எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் கவிதை பாடியவன். இதனால் தான் நிரந்தரக் கவிஞனான கண்ணதாசனுக்கு நம் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விழா எடுத்திருக்கிறார். சிலர் கண்ணதாசனின் நண்பர் எனக்கூறி 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்றார்கள். ஆனால், அவர்கள் எல்லாம் அவ்வாறு நடந்துகாட்டவில்லை. ஆனால், இன்று சென்னையில் முக்கிய இடத்தில் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கண்ணதாசனுக்கு வெண்கலச் சிலை அமைத்துள்ளார்" எனப் பேசினார்.

கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபத்தில் ரூ.14 ஆயிரம் மதிப்பில் ஏற்பாடு செய்துள்ள ஒலி அமைப்பை மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் தொடங்கிவைத்து விழாச் சிறப்புரை ஆற்றினார்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள், திரு கரு. முருகானந்தம், திரு மா.சா.மா. இராமச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

**– ரெ. இராவணன்,**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
சிவகங்கை.



## கவியரசு கண்ணதாசன்

**புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அடிச்சுவட்டில் இன்று எத்தனையோ கவிஞர்கள் மக்களிடையே எழுச்சி முரசு கொட்டி வருகிறார்கள். இலட்சிய கீதம் இசைத்து வருகிறார்கள்.**

**படத்துறை மூலமாகவும் மக்கள் மனத்திலே இடம் பிடித்துக்கொண்டு, சீரிய கருத்துக்களால் செல்வாக்குப் பெற்றுவரும் கவிஞர்களையும் காண்கிறோம். அவர்களால் தமிழுக்குத் தனி வலிவு, தனிப் பொலிவு ஏற்படுகிறது என்பதையும் நாம் மறுப்பதற்கு இல்லை. உடுமலை நாராயண கவி, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி, கண்ணதாசன் முதலானோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.**

**இந்த நேரத்தில் கண்ணதாசனின் கவிதைத் திறனைப் பாராட்ட மறந்தால், நான் தமிழ் மொழியையே அறியாதவன் ஆகிவிடுவேன்.**

**கவிதைத் துறையில் அவருக்குத் தனி இடம் உண்டு**

**- பேரறிஞர் அண்ணா**

# தமிழில் மருத்துவம்

**டாக்டர் பி.பி. ராஜன்**
**துணை வேந்தர்**
**டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம்**

இன்று தமிழ்ச் சரித்திரத்தில் ஒரு பொன்னான தினமாக நாம் கருதவேண்டும். தமிழர்கள் தஞ்சைத் தரணியில் கூடி, தமிழுக்காக விழா எடுத்துக்கொண்டு இருக்கும் இந்த நேரத்தில், இந்த நன்னாளில், தமிழுக்காகத் தொண்டு செய்து வரும் ஒவ்வொருவரையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். சிவனடியாருக்கு ஒருவர் செய்யும் தொண்டு சிவனுக்கே போய்ச் சேருவது போல் தமிழ்த் தொண்டர் ஒருவருக்கு நாம் செய்யும் பணி தமிழன்னைக்கே போய்ச் சேரும் என்பதில் சற்றும் ஐயமில்லை.

இன்று தமிழக முதல்வர் மூலமாக நாம் தமிழன்னையையே நேரில் காண்கிறோம் என்றால் அது மிகையாகாது. இன்று நடக்கும் இந்த விழா சரித்திரத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். ஏனென்றால், இதுவரை கொடுக்காத முக்கியத்துவம் இந்த ஆண்டு தற்போது தமிழுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அறிவியலால்தான் அறிவு வளரும்; அறிவியலால்தான் அறிவு என்ற சொல்லே உண்டாகி இருக்கிறது. நாம் அறிவியலை வளர்த்தால் மக்கள் அறிவு தானாகவே வளரும் என்பதில் ஐயமில்லை. எங்கு பார்த்தாலும் இன்று அறிவியலைப் பற்றிப் பேசப்படுகிறது.

இந்த மாநாட்டில்தான் முதன் முதலாக அறிவியலுக்காகச் சிறப்பு மலருடன் - அறிவியல் மலர் ஒன்றும் வெளியிடப் படுகிறது. அறிவியல் அறிந்த ஆன்றோர் ஒவ்வொருவரும் இதற்காக முதல்வர் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அறிவியல் மலரையும், அறிவியல் மலருக்காக நாம் செய்துவரும் தொண்டுகள் அனைத்தையும் தமிழன்னையின் பொற்பாதங்களில் வைத்து மலராகச் சமர்ப்பிக்க முற்படுகிறோம்.

எத்தனையோ இடைஞ்சல்கள் வந்தாலும் தமிழ் மாநாட்டை நடத்தியே தீர வேண்டும் என்ற மன உறுதியோடு செயல்பட்டு - அறிவியலுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அவர்களைச் சார்ந்த அனைவருக்கும் நம் சமுதாயம் - அறிவியல் சமுதாயம் என்றென்றைக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

அறிவியலை நாம் தீவிரப்படுத்த முற்படுகிறோம். ஆனால் எப்படித் தீவிரப்படுத்துவது, எங்கு போனாலும் அறிவியல், குறிப்பாக மருத்துவ அறிவியலைப் பற்றி நாம் பேசும்போது, மருத்துவத்துறையில், எங்கள் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் இதற்காக ஒரு தனிக் குழுவை வைத்திருக்கிறோம். 'மருத்துவ மேம்பாடு தமிழ் மேம்பாட்டுக் குழு' என்று வைத்திருக்கிறோம்.

நாம் எப்படி மருத்துவத்தில் தமிழை வளர்ப்பது? அறிவை எப்படிப் புகுத்துவது, அறிவை எப்படிக் கொண்டுவருவது என்றால், அதிலும் தீர்மானமாக ஒரு முடிவை எடுக்க முடியவில்லை.

நாம் சாதாரணமாக மருத்துவத்தை எடுத்துக்கொண்டோமானால், கிராமத்துக்கு ஒரு மருத்துவர் போய் அங்கு தமிழிலேயே பேசி, அந்த மருத்துவத்தைப் பற்றிச் சொல்லி விளக்கி அவர்களுக்கு அதைக் கூறி அந்த மருந்து எப்படி

வேலை செய்கிறது என்று சொன்னால், வியாதி சீக்கிரமாகவே குணமாகிவிடும். அதை விட்டுவிட்டு, அவர்களிடம் போய் ஆங்கிலத்தில் சொன்னால், அவர்களுக்கு ஆங்கிலமும் புரியாது. அவர்கள் சொல்லுவதில் என்ன இருக்கிறது என்றும் புரியாது.

அறிவியலில் ஏன் தமிழ் வேண்டும்? தமிழன் மற்ற மொழியில் பேசும்பொழுது ஒரு கடமைக்காகப் பேசவேண்டியிருக்கிறது. தமிழில் ஒரு தமிழன் மருத்துவத்தைப் படிக்கும்போது, அவன் தேர்வு எழுதும்போது, முதலாவதாக மருத்துவத்தைப் புரிந்து கொள்வதற்காக முன்னால் அந்த வேறு அந்நிய பாஷையைப் படித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதை முதலில் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அதைப் படித்துக் கொண்டே - அதற்குப் பிறகு சிந்தனை செய்து அதைத் தமிழில் மாற்றி, மறுபடி அதை ஆங்கிலத்தில் மாற்றி, அதற்குப் பிறகுதான் எழுத வேண்டிய நிலை உருவாகிறது.

நான் கூட எங்கள் பல்கலைக் கழகம் மூலம் ஒரு புத்தகம் வெளியிட்டேன். 'எய்ட்ஸ்' என்பதைப் பற்றி. எய்ட்ஸ் என்றால் என்ன? என்று தெரியும். பத்திரிகைகளில் வருகிறது. இதை மக்களுக்குப் புரியவைக்க வேண்டும். பல்கலைக் கழகம் தேர்வு மட்டும் நடத்திக் கொண்டிருக்கக் கூடாது. மருத்துவத்தைப் பற்றி மக்களுக்குத் தெரியப் படுத்த வேண்டுமென்றுதான் எளிய முறையில் அதை எழுதி வெளியிட்டோம். ஆங்கிலத்தில்

★ **நம் மனம் ஒரு மியூசியம் போல இருக்கிறது. எது கொள்ளத் தக்கதோ, அதை ஏற்றுக் கொள்ளுங்கள். எது தள்ளத் தக்கதோ, அதைத் தள்ளி விடுங்கள்.**

**- பேரறிஞர் அண்ணா**

எய்ட்ஸ் என்று தலைப்புக் கொடுத்தோம்.

இதைத் தமிழாக்கம் செய்து, தமிழிலே இதற்கு என்ன தலைப்புப் போடுவது என்று ஆராய்ந்தோம். ஒரு மணி நேர ஆராய்ச்சிக்குப் பிறகும் அதற்குச் சரியான தமிழ்ப் பதம் கிடைக்கவில்லை. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொலைபேசி மூலம் பேசி, இதற்கு என்ன தமிழாக்கம் கொடுக்கலாம் என்று கேட்டோம். அப்போது பதில் வந்தது - ஏமக் குறைவு நோய் அல்லது ஏம இழப்பு நோய் என்று போடலாம் என்று சொன்னார்கள்.

உடனே சிலரைக் கூப்பிட்டு 'ஏம இழப்பு நோய்' பற்றித் தெரியுமா என்று கேட்டோம். தெரியவில்லை. அப்படி ஒரு நோய் இருப்பதாகவே தெரியாது என்றனர். எய்ட்ஸ் தெரியுமா என்று கேட்டால் தெரியும் என்றார்கள். எல்லோருக்கும் எய்ட்ஸ் என்றால் தெரியும்.

இதற்கு நடுவில் மற்றொரு குழப்பம் - இது ஏம இழப்பு நோயா? அல்லது ஏமக்குறைவு நோயா? எய்ட்ஸ் நோயை எய்ட்ஸ் என்பது 'அக்யூர்டு யுமினிட்டி சின்ட்ரோம் எபிஸியன்ஸி சின்ட்ரோம்' என்று சொல்கிறோம். அப்படியென்றால் இது ஏம இழப்பு நோய் இல்லை ஏமக் குறைவு நோய் என முடிவெடுத்து, கடைசியாக அதை ஏமக் குறைவு நோய் என்றே புத்தகத் தலைப்பாகப் போட்டோம். முடிவில், இதெல்லாம் வேண்டாம் என்று முடிவு செய்து, எல்லோருக்கும் புரியும் என முடிவெடுத்து எய்ட்ஸ் என்றே போட்டு முடித்து விட்டோம். இதுதான் மருத்துவத்தில் நாம் தமிழைப் புகுத்தும் போது எங்களுக்குள்ள சிரமம்.

இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பில் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஏனென்றால், மருத்துவ நூல்களை மருத்துவர்கள்தான் மொழிபெயர்க்க வேண்டும். இதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன்.

ஒரு சமயம் ஒரு நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போது ஒரு வாசகம் Government has got a great role to play என்று வந்தது. இதைத் தமிழாக்கம் செய்யும்போது 'அரசு விளையாடுவதற்காக ஒரு பெரிய உருளை வைத்திருக்கிறது' என்று மொழிபெயர்ப்பார்கள். அது எப்படிச் சரியாகும்? ஆகையினால், ஆங்கிலத்தில் உள்ளதைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது, குறிப்பாக இந்த மருத்துவத்தில் ஆங்கிலத்தில் நூல்கள் இருந்து அதை மொழிபெயர்க்கிறபோது முதலில் அந்த மருத்துவர்கள் அதைப்புரிந்து கொண்டாக வேண்டும்.

'மருந்தென வேண்டாவாம்
யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி யுணின்'
- என்றார் திருவள்ளுவர்.

மருத்துவம் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அந்தக் காலத்தில் நம்முடைய சித்தர்கள் சொல்லாத மருத்துவ முறையே கிடையாது. ஏராள மான மருத்துவ முறைகள், மருந்துகள் எப்படி செய்வது என்பதைப் பற்றியும், அந்த மருந்துப் பொருள்களில் என்ன குறைகள் இருக்கிறது என்பதைப் பற்றியும் அந்தச் சித்தர்கள், தெளிவாகச் சொல்லி இருக் கிறார்கள். காலத்தால் மறைந்தது போக, வழிவழி வந்த சித்த மருத்துவ முறைகள் சுவடிகளில் இருக்கின்றன. எஞ்சிய சில சுவடிகளை நாம் பார்க்கிறோம். அன்னிய ஆதிக்கத்தில் - படை யெடுப்புகளினால், அந்த மருத் துவ முறைகள் ஓரளவுக்கு இன்று சீர்குலைந்து குறைந்து இருக்கிறது.

தாய்மொழியில் மருத்துவக் கல்வி கற்பதை ஒரு பாடமாகக் கொண்டு வரலாமா என்ற ஒரு சர்ச்சை எழும்பியது. நாம் ஏன் இந்த மருத்துவத் துறையில் மருத்துவ மாணவர்களுக்கு மருத்துவம் சொல்லிக் கொடுக்கும்போது தமிழிலும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக் கூடாது? ஏன் என்றால் இப்போது வரும் மாணவர்கள் - மருத்துவக் கல் லூரியில் சேர வரும் மாண வர்கள் அதிகமாகத் தமிழிலேயே பாடங்களைப் படித்துவிட்டு வருகிறார்கள். முதலாவதாக இந்த அனாடமி, பிசியாலாஜி ஆங்கிலத்தில் இருக்கும்போது அவர்களுக்கு அந்த ஆங்கிலப் பாடத்தில் சரியாகப் புரிவ தில்லை. ஆனால் இதை முழுமை யாகத் தமிழிலேயே பாடம் சொல்லிக் கொடுப்பதிலும் சில சிக்கல்கள் இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் தமிழி லேயே மருத்துவம் சொல்லிக் கொடுக்கிறார்கள். பட்டமும் கொடுக்கிறார்கள். ஆனால் நமது மருத்துவக் கல்லூரி மாண வர்கள் இந்திய நாட்டில் - பல நாடுகளிலிருந்து வந்திருக் கிறார்கள். பல மொழியையும் படித்து வந்திருக்கிறார்கள். துணை மொழியாக ஆங்கிலத் தில் படித்து முடித்தவுடன் மாலை நேரங்களில் அதை எளிய தமிழில் மொழிபெயர்த்து நாம் அதைச் சொல்லிக் கொடுப்பேமேயானால், அவர் களுக்கு அது நன்றாக விளங்கு கிறது. இதற்காக ஒரு ஊக்கத் தொகையைக் கொடுக்க வேண் டும். சில கல்லூரிகள் இதற்காக அந்தக் கல்லூரி முதல்வர் மூலமாக அவர்களில் யார் யார் தமிழில் படிக்க விரும்புகிறார் களோ, ஆசிரியர்களில் யார் யார் தமிழில் சொல்லிக் கொடுக்க விரும்புகிறார்களோ, ஆசிரியர்களுக்கும் ஊக்கத் தொகை கொடுத்து அந்த மாணவர்களுக்கும் அதை எளி தில் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம்.

இது அறிவியல் தமிழ் மருத்துவத்தில் சீக்கிரமாக வளர உதவும். தவிர, இந்தத் தமிழி லேயே மருத்துவம் படித்து வருபவர்கள் பிற நாடுகளுக்குப் போக வேண்டாம் என்று சொல்லி, பிற மாநிலத்திற்குப் போக வேண்டுமென்றால் ஆங்கிலத்தில் படித்துக் கொண்டு அதற்குப் பிறகு போகலாம்.

ஜெர்மன் நாட்டில் ஜெர்மன் மொழியில்தான் மருத்துவம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஜப்பான் நாட்டில் ஜப்பான் மொழியில்தான் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அதனால் ஜப்பான் டாக்டர்கள் வெளி நாட்டிற்குப் போகாமல் இல்லை. ஜெர்மனி டாக்டர்கள் வெளி நாட்டிற்குப் போகாமல் இல்லை. அதே நிலையைத்தான் நாமும் உருவாக்க முற்பட வேண்டும். தவிர, தமிழில் மருத்துவம் படித்தவர்கள் தமிழ்நாட்டிலேயே இருக்கவேண்டும் என்று சொன் னால்,கிராமங்களுக்கு டாக்டர்கள் போவது இல்லை என்று சொல்கிறோம். ஓரளவுக்கு அது தவிர்க்கப்படும்.

ஏனென்றால், இவர் தமிழி லேயே மட்டும் மருத்துவப் படிப்பு படித்தால் அவர்கள் அந்தக் கிராமங்களில் போய் இருக்கும்போது அவர்களுக்கு - அவர்கள் தமிழிலே வைத்தியம் செய்யும்போது, மற்ற மாநிலங் களுக்கோ மற்ற ஊர்களுக்கோ போய்ச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

ஆகவே, இந்த அறிவியல் தமிழினை மருத்துவத்திலும் வளர்க்க வேண்டும். மற்ற துறை யைப் பற்றிப் பேசுவதற்கு நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால், குறிப்பாகப் பண்டைக் காலந்தொட்டு தமிழில் மருத்து வம் வளர்ந்து வருவதைப் போல் நாம் அதற்கு ஒரு முன்னோடி யாக இருந்து இப்பொழுது அதற்கு என்னென்ன தொண்டு செய்ய வேண்டுமென்று ஆராய்ந்து நாம் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு

தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி



தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

